சத்திய வேத
# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 47-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### மன்னார் அரசாங்க அதிபர்

மன்னார் அரசாங்க அதிபராய் இருந்து வருகிறவரான திரு. டபிள்யு. பத்திராஜாஅவர்கள் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டிருக்கிறாரென்றும், அடுத்த தைமாதம் அவர் அங்குசெல்வாரென்றும் தெரியவருகிறது. இவரிடமாக மன்னார் அரசாங்க அதிபராய்க் கொழும்பு ரேகுப்பகுதியைச்சேர்ந்த திரு. வி. பி. விற்றுச்சி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### திருஇருதயத்தூதன் ஆசிரியர்

செபஅப்போஸ்தலசபை வெளியீடாக மதுரையிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் "திருஇருதயத் தூதன்" என்ற மாதாந்தசஞ்சிகையில் 'ஏ. கே.'என்ற பெயரின்கீழ் "இவர் யார்?" என்ற தலையங்கத்துடன் தொடர்பாக அருமையான கட்டுரைகளும், பிறகட்டுரைகளும் எழுதிவந்துள்ளவரான வண. அருள் குழந்தைசாமியவர்கள் திருஇருதயத்தூதன் ஆசிரியராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம்.

### விபத்துக்குள்ளான பொலிஸ்தலைவர்

வடமாகாணப் பொலிஸ்உதவிச்சுப்பிறின்ரெண்டன் திரு. ஜே. ஏ. எல். ரெஸிமலிக் தமதுகாரிலே சென்ற 2-ந்திகதியன்று முல்லைத்தீவுக்குப் பிரயாணஞ்செய்தபோது, வழியில் கார் விபத்துக்குள்ளாகவே, அவருக்குவிலா[illegible]ம்பில் முறிவேற்படலாயிற்று. காரை[illegible]லுத்திச்சென்ற பொலிஸ்காரர் எஸ். [illegible]ல்லத்துரை முகத்தில் வெட்டுக்காயங்க[illegible] யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### முத்துச்சிப்பிப் பரிசோதனை

அரசாங்க கடற்றொழிற் பகுதியினர் விலே முத்துச்சிப்பிப் பரிசோதனை நடத்தவிருக்கிறது. இந்தப்பரிசோதனை திருப்தியளிக்குமிடத்து வருகிற மாசிமாதத்திலே முத்துக் குளிப்பு நடைபெறுமாம். 1955-ம், 1956-ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின்போது ஏராளமான இளம் முத்துச்சிப்பிகள் இருக்கக்கண்டறியப்பட்டது. இந்தச்சிப்பிகள் அடுத்தவருடத்திலே நன்றாகமுற்றிக் குளிப்பதற்குப் பக்குவமாகிவிடலாமெனக் கருதப்படுகிறது.

### தமிழ்உபயோக ஒப்பந்தம்

பிரதமருக்கும், தமிழரசுக்கட்சிக்குமிடையே தமிழ்மொழியின் நியாயமான உபயோகம்சம்பந்தமாய் ஏற்பட்ட சமாசஒப்பந்தம்பற்றிப் பாராளுமன்றத்தில் வரவிருக்குஞ்சட்டம் 75விகிதம் தயாராகிவிட்டது; ஒப்பந்தம்ஏற்பட்டபோது ஒப்புக்கொண்டபடியே இன்னும் இரண்டுமாதங்களுள் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென்று பிரதமர் தம்மிடம்தெரிவித்திருப்பதாகத் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் சென்ற 2-ந்திகதியன்று மட்டக்களப்புத் தமிழரசுக்கட்சிக்கிளை அங்கத்தவர்களின் கூட்டம் ஒன்றிலே தெரிவித்திருக்கின்றார்.

### பெருமழையும் பெருவெள்ளமும்

யாழ்ப்பாணத்திலே அடைமழைபோன்று பலதினங்களாகப் பெய்துகொண்டுவந்தமழை சென்றவெள்ளிக்கிழமை முற்பகல் பெரும்மழையாகப் பெய்து, அதனால் பலவிடங்களிலும் பெருவெள்ளம் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணநகரசபை எல்லைக்குட்பட்ட பதிந்தநிலப்பகுதிகள் இந்தப்பெருமழையாலே வெள்ளக்காடாயின. 300 வீடுகளுக்குமேல் சரிந்துவிட்டன. சுமார் 900 குடும்பங்களைச்சேர்ந்த 5,000 பேர்வரையிலே வீடிழந்து கஷ்டமடைகின்றனர். அரசடிவீதியிலும், நல்லூர்ப் பிராமணன் கட்டுக்குளப்பகுதியிலும் 100 குடும்பங்களும், கரையூர்ப்பகுதியில் 80குடும்பங்களும், ஆரியகுளப்பகுதியில் 200 குடும்பங்களும், நாவாந்துறையிலும், வண்ணார் பண்ணைப்பகுதியிலும் மற்றும் 200 குடும்பங்களும் வெள்ளச்சேதங்காரணமாகப் பெருங்கஷ்டத்துக்குள்ளாயின. பெருந்தொகையான ஆடுகள், கோழிகளும் வெள்ளத்தால்அடித்துச்செல்லப்பட்டன. அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகந்தாஅவர்களும, காரியாதிகாரி திரு. ஏ. பெருமையினாரும் அன்றுபிற்பகல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு வீடிழந்து கஷ்டமுற்றவர்களுக்கு உடனடியாக இலவசஉணவுப்பொருள் அளிக்க ஏற்பாடுசெய்தனர். வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடுவதிலும், அத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பதிலும் சமூகசேவா பகுதியைச்சேர்ந்த அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

### வன்னேரிப்பகுதியிலும் பெருவெள்ளம்

வன்னேரிக்குளம், வட்டக்கச்சி, கல்மடுஆகியாமிடங்களிலே பெருமழைகாரணமாக உண்டானவெள்ளப்பெருக்கால் சுமார் 5,000 மக்கள் வீடுவாசல்களை இழந்து பெருங்கஷ்டத்துக்குள்ளாய் இருப்பதாகவும், கனகராயன் ஆறு பெருக்கெடுத்ததால் வீதிப்போக்குவரத்துகள் முற்றாகத் தடைப்பட்டிருப்பதாகவும் செய்திகிடைத்திருக்கிறது. அங்குவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உணவுப்பொருட்கள்கொண்டுசென்று உதவப்படுகின்றன. கிராஞ்சியிலும் சுமார் 500 குடியேற்றவாசிகளின் குடிசைகள் வெள்ளத்தின்வாய்ப்படவே இவர்களும் இல்லிடமற்றுத் தவிக்கின்றார்கள். இவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து வள்ளங்களிலே உணவுப்பொருட்கள் கொண்டுசென்று வழங்கப்படுகின்றன.

### குடும்பங்களும் தேவ அழைத்தல்களும்

கல்கத்தாநகரிலுள்ள ஆசனக்கோவில், திருஇருதய ஆண்டவர் கோவில், அர்ச். தெரேசம்மாள் கோவில், அர்ச். தோமையார் கோவில், கிறீஸ்துஇராசா கோவில், சிந்தாத்திரைமாதா கோவிலாகிய ஆறுகோவில்களினதும் விசாரணைப்பங்குகளைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்களின் பிரதிநிதிகள் சென்றஐப்பசி மாதம் 27-ந் திகதி ஞாயிறுவாரம் திருஇருதய ஆண்டவர் கோவில் குருமனையிலே ஒன்றுகூடிப் பெற்றோர் சமாஜம் ஒன்றை அடியிட்டிருக்கின்றார்கள். இந்தச் சமாஜத்தின் நோக்கம், தேவ அழைத்தல் மட்டிலே பெற்றோரை ஒன்றுகூட்டுவதும், கல்கத்தா அதிமேற்றிராசனத்தில் தேவஅழைத்தல்களுக்கான வழிவகைகளைச் செய்வதுமேயாகும். அன்றுநிகழ்ந்த கூட்டத்தில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

1. ஒவ்வோர் குடும்பமும் தேவ அழைத்தல்களுக்காகத் தினமும் ஓர்செபம் சொல்லிவரவேண்டும். (கல்கத்தா அதிமேற்றிராணியாரால் பலன் அளிக்கப்பெற்ற சுருக்கமும், அதிகம் பொருத்தமுமான செபம்ஒன்று அச்சிடப்பெற்றுக் கூட்டத்தில் சகலருக்கும் வழங்கப்படலாயிற்று.)

2. ஒவ்வோர் குடும்பமும் மாதத்தின் முதல் வியாழக்கிழமைதோறும் திவ்வியபூசைகண்டு, சமாஜத்தின் கருத்துகளுக்காகத் திவ்விய நற்கருணை வாங்குமாறு அங்கத்தவர்களை ஊக்கப்படுத்துவது.

3. சமாஜத்தின் முயற்சிகளைப் பரக்கச்செய்து விருத்தி பண்ணுவதற்கான திட்டங்களைச் செய்யுமாறு ஒவ்வோர் விசாரணைப் பங்கிலிருந்தும் குறைந்தபட்சம் ஒவ்வோர் பிரதிநிதியைக்கொண்ட விசேஷ கழகம் ஒன்றை ஆக்குவது.

கல்கத்தா அதிமேற்றிராணியார் கூட்டத்துக்கு ஓர்விசேஷ செய்தி அனுப்பிவைத்து, அவர்களின் நன்முயற்சியை ஆசீர்வதித்தார்.

### காவலரைத்தாக்கிய கைதி

யாழ்ப்பாணச் சிறைச் சாலையிலே திரு. எஸ். சுப்பிரமணியம்என்ற சிறைக்காவலாளர் சென்ற1-ந்திகதியன்று கடமையாற்றிக்கொண்டிருந்தபோது கைதிஒருவனால் தாக்கப்பட்டார். அவர் முகத்தில் அந்தக்கைதி தனதுமுஷ்டியால் குத்தியதன்விளைவாக அவரது முன்வாய்ப் பற்களில்ஒன்று விழுந்துவிட்டது. இதுசம்பந்தமாய்ச் சிறைச்சாலைஅதிகாரிகள் விசாரணை நடத்தியிருக்கிறார்கள்.

### ஆஸ்பத்திரிச் சுவீப்நிதி

ஆஸ்பத்திரிச் சுவீப்மூலம் இதுவரை கிடைத்துள்ள 30லட்சம்ரூபாவையும் சயரோகஒழிப்புக்குச்செலவிடவேண்டுமென்று அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. அதிலே 20லட்சம்ரூபாவைக் கொழும்பிலே ஓர்மத்தியமார்புநோய்ச் சிகிச்சைநிலையமும், மீதிப்பணங்கொண்டு மட்டக்களப்பிலும், வதுளையிலும் இருசிகிச்சைநிலையங்களும் அமைப்பதற்கான திட்டம்ஒன்றைத் தயாரிக்குமாறு அரசாங்கம் சுகாதாரமந்திரிக்கு அதிகாரம் அளித்துள்ளது. பிந்திய இருஇடங்களிலும் அமைக்கப்படும் மார்புநோய்ச் சிகிச்சைநிலையம் ஒவ்வொன்றுக்கும் ஐந்துலட்சம்ரூபா செலவாகும்.

### ஐம்பதினாயிரம்ரூபா நஷ்டஈடு

கண்டிப்பகுதி உதைபந்தாட்டக் கோஷ்டியின் கப்டினாக இருந்தவரும், பிரபலஉதைபந்தாட்ட வீரருமான ஜனாப் பி. டி. ஷரீப் தீன்என்பவர் சில மாதங்களின்முன் ஓர்மோட்டார்சைக்கிளில் பிரயாணஞ்செய்தபோது கண்டி ஓம்னிபஸ் கம்பெனிக்குச் சொந்தமான பஸ்ஒன்று அவர்சென்ற மோட்டர்சைக்கிளில் மோதியது. இந்தவிபத்தில் அவர்காயமடைந்து தனது காலை இழந்துவிட்டார். அதனால் அந்தப் பஸ் தனக்குக் காயம்உண்டுபண்ணியதற்காக அந்தப் பஸ்கம்பெனிமீது 60,000 ரூபா நஷ்டஈடுகோரித் தொடர்ந்தவழக்குக் கண்டிடிஸ்திறிக்கோட்டில் சென்ற 1-ந் திகதியன்று விசாரணைக்குள்ளாய் அவருக்கு 50,000ரூபா நஷ்டஈடும், வழக்குச்செலவுதொகையும் கட்டும்படி தீர்ப்பாயிற்று.

### கடலுக்குப்பலியான மாணவர்கள்

கொழும்பிலே கல்கிஸையைச்சேர்ந்த 16வயதுடைய சலிகுலதுங்கா, 14வயதுடைய செனக குலதுங்காஎனும் இரு சகோதரர்களும் சென்ற ஞாயிற்றுக்கிழமை தங்கள் பணியாளனான 23 வயதுடைய சுக்லரத்தினாவும் சென் தோமாஸ் கல்லூரியிலிருந்து சுமார் அரைமைல்தூரத்திலே கடலில்நீராடிக்கொண்டிருந்தபோது மூவரும் ஒருங்கே நீரில்மூழ்கினர். சிறுவர்களின்பெற்றோர் அப்போது கடற்கரையில் நின்றார்கள். அவர்களைக் காப்பாற்றுமாறு எடுத்துக்கொண்ட முயற்சிகள்யாவும் வியர்த்தமாயின. குலதுங்கா சகோதரர்கள்இருவரும் றோயல் கல்லூரிமாணவர்கள். கல்கிஸைக்கடற்கரையிலே அபாயகரமான இடமென்று எச்சரித்துஎழுதிவைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகை சுமார் மூன்றுவாரங்களுக்குமுன் மறைந்துவிடலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரண அறிக்கை

நீர்கொழும்பு முன்னக்கரையைச் சேர்ந்தவரும், உத்தம கத்தோலிக்கரும், கல்விமானும், யாவராலும் 'பெர்ணண்டோமாஸ்றர்'என மரியாதையுடனும், அன்புடனும் போற்றப்பட்டுவந்தவருமாகிய திரு. யோண் விஸ்திரினி பெர்ணண்டோ ஆசிரியரவர்கள் தமது 61-ம்வயதில் கடைசித்தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்றுச் சென்றமாதம் 4-ந்திகதிஇரவு மரணத்திரையுள் மறையலாயினர்.

இவர் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைப் பழையமாணவரில் ஒருவர். நீர்கொழும்பு, மீபாளவளானைத் தமிழ்ஆசிரியாக 1928-ம் ஆண்டுதொடக்கம் 34-ம்ஆண்டுவரை சேவைசெய்தார். இவரிடம்பயின்றவர்களில் பலர்இன்று சந்நியாசிமாராகவும், கன்னியாஸ்திரிமாராகவும், ஆசிரியர்களாகவும் நற்தொண்டாற்றி வருகின்றனர்கள். தொடர்ந்து கொழும்பு, மாளிகாவத்தை டென்ஹாம் ஆங்கிலபாடசாலை உதவி ஆசிரியராகவும், கம்பனித்தெருக் கன்னியர்மடத்தமிழ்ப்பாடசாலைத்தலைமைஆசிரியாகவும், கொழும்பு, மேட்டுத்தெரு அர்ச்.அன்னம்மாள் தமிழ்ப் பாடசாலைத் தலைமைஆசிரியாகவும் அருந்தொண்டாற்றிக் கடந்த ஐப்பசி மாதம் 1-ந்திகதி தமது 61-ம்வயதில் சேவையினின்றும் இளைப்பாறலாயினர்.

இவர்சேவைசெய்தகாலங்களில் தம்மிடமுள்ள ஆழ்ந்தஅறிவு, அத்தியந்த தாழ்மை, இன்சொல், நன்முன்மாதிரிகை, தருமசிந்தைஆகியாம்சீரியகுணங்களால் யாவரையும்கவரும் ஓர்விதசக்தி பெற்றிருந்தார். இதற்குச் சென்ற மாதம் 5-ந்திகதிகாலை கொட்டாஞ்சேனை சந்தலூசியா ஆசனக்கோவிலில் நடந்த துக்கப்பாடற்பூசையின் போதும், அதன்பின் அவர்துபிரேதத்தை நீர்கொழும்பிற்கு வழியனுப்பிவைக்கும் இடம்வரைக்கும் தொடர்ந்து சென்ற கன்னியர், ஆசிரியர், மாணவர், அனுதாபிகள்யாவரதும் ஏகோபித்த அழுகைப்பிரலாபமே சாட்சியாகும்.

இவருக்கு ஆறு புத்திரர்களுளர். கொட்டாஞ்சேனை சென் பெனடிக்ஸ் கல்லூரிஆசிரியர்களில் ஒருவராகக் கடமைபுரியும திரு. டட்லி பெர்ணண்டோ, பி. ஏ. இவரது மூத்தமகனுவர். கொழும்பு மோறிஸ்ரூச் கம்பனியில் விளம்பர மனேஜராகக் கடமையாற்றும் திரு. ஒலிவர் பெர்ணண்டோ இவரது இரண்டாம்மகனுவர். குளோட், நெவில், டெனிஸ், மேவின் ஆகியோர் மற்றைய புத்திரர்களாவர். இவரது மனைவியார் கொழும்பு தட்டாரத்தெரு பாத்திமாபாடசாலைத்தலைமைஆசிரியையாகத் தற்போதும் கடமைஆற்றுகின்றுர்.

இவரதுபிரேதம் 5-ந்திகதிகாலை நீர்கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டு அன்றுசாயந்தரம் 4-30 மணியளவில் குருமார் துக்கசங்கீதம்பாடிச்செல்ல, கொழும்பு மேட்டுத்தெரு ஆர்ச். அன்னம்மாள் பாடசாலைமாணவர், ஆசிரியர் பூவளையங்களுடன் முன்னே அணிவகுத்துச்செல்ல, உற்றூர், உறவினர், பழையமாணவர், நண்பர் பின்தொடரச் சேமக்காலை கொண்டுசெல்லப்பட்டது. அங்கு இவரதுபழையமாணவரில் ஒருவரும், ஆசிரியருமாகிய திரு.

## மரியாயின் சேனை
### வருடாந்த பண்டிகை

மரியாயின்சேனையின் வருடாந்த பண்டிகை நீர்கொழும்பு, கடற்கரைத் தெரு விசாரணைப்பங்கைச் சேர்ந்த சமுத்திரத்தின் நட்சத்திரப் பிரெசிடியத்தினுலும், சதாசகாயமாதா பிரெசிடியத்தினுலும் 10-11-57 ஞாயிறுவாரம் கடற்கரைத்தெரு பெண்பாடசாலை மண்டபத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மரியாயின் சேனை ஆரம்பசெபததுடன் பிற்பகல் 3மணிக்குத் தொடங்கிய இக்கொண்டாட்டத்திலே திருச்செபமாலையும், செபங்களும், கீர்த்தனைகளும் தமிழிலும், சிங்களத்திலும் மாறிமாறிநடைபெற்றன. வண. டொமினிக் சவுசா சுவாமியவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்ற இவ்வைபவத்தில் வண. கிறிஸ்தோப்பர் சுவாமியவர்களும். வண. ப. பிரான்சீஸ் சுவாமியவர்களும் முறையே தமிழிலும், சிங்களத்திலும் அங்கு கூடியிருந்த திரளானஉதவிஅங்கத்தவர்களுக்குச் செபத்தின்அருமை பற்றிச் சிறந்த பிரசங்கங்கள் நிகழ்த்தி, சேனையின் நடவடிக்கைகளிலே எல்லோருக்கும் உற்சாகமூட்டினர். சேனை அங்கத்தவர்களால் நடத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்ட பின் எல்லோருக்கும் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. வழமையான சுற்றுப்பிரகாரம் மழைகாரணமாகத்தடைபட்டதாயினும் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்தோடு விழா இனிதுமுடிபெய்தியது.

மரியாயின் பக்தன்

## தேகவியோகம்

ஊர்காவற்றுறை, உதயதிசையைத் தமது ஜனனபதியாகக்கொண்டவரும், கொழும்பு அளவைக்கந்தோரில் தலைமைக்கிளாக்குவும், டிறுவ்ஸ்மனுமாயிருந்து இளைப்பாறியவருமான திரு. க. யோசேப் செல்வத்துரை அவர்கள் இரண்டொருதினங்களாய் நோய்கண்டிருந்து அந்தியதேவதிரவிய அனுமானங்களை நல்லறிவுடன் பெற்று, 4-10-57 வெள்ளிக்கிழமை மரணநித்திரையாயினுர். மரிக்கும்போது இவருக்குவயது 65. மறுதினம் இவரின் பிரேதம் மன்னார்க் கத்தோலிக்கசேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்பட்டது. இவர் மாதோட்டப்பகுதியில் பலவருடங்களாகத் தமிழ்ஆசிரியாகச்சேவையாற்றிவந்தவர். தேவபக்தி, நேர்மை, நல்லொழுக்கம், இரக்கம், தருமசிந்தையுடையவர். ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார்ஆலய மூப்பராயிருந்து காலஞ்சென்ற திரு. சூசைப்பிள்ளை கயித்தாம்பிள்ளை இவரின் தந்தையாவர். அம்பாறையிலே கட்டடப் பகுதியில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. யோ. அ. எட்வேட் இவரின் மூத்தபுதல்வர். இவரைப்பிரிந்து துயருறும்மனைவி, புத்திரர், சகோதரிகள், இனசனருக்கு எமதுஅனுதாபம்உரித்தாகுக. இப்பெரியாரின் ஆன்மா சாந்தியடைவதாக. (கடிதர்)

R. I. P.

வியோனிஸ் பெர்ணந்து அவர்களும், கொட்டாஞ்சேனை உதவிக்குருவாகிய வண. சவரிமுத்துச்சுவாமியார் அவர்களும் இவரது சேவை, குணதிசயங்கள் என்பனவற்றைப் பாராட்டிநின்றனர். ஈற்றில் குருவர்அவர்களின் கடைசி ஆசீர்வாதத்துடனும், யாவரதும் அழுகைப்பிரலாபத்தின்மத்தியிலும் இவரின்பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படலாயிற்று.

இவரை இழந்து ஆருத்துயருள்மூழ்கியிருக்கும் அருமைமனைவியாரோடும, புத்திரர், உறவினரோடும் நாமும்அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

### ஆசனக்கோவிலில்
## தேவஅழைத்தல் ஆராதனை

கடந்தவாரத்தைப் பள்ளிச்சிறூர்களின் "புனிதவாரம்" என்று கூறுவது மிகையாகாது. ஏனெனில, அவ்வாரத்தில் நடந்தேறிய பிரத்தியேக திரிதின ஆராதனை வாலிபர்களையும், யுவதிகளையும் நிலையற்ற லௌகிக சுகபோகங்களினின்று "தேவதொண்டு" என்னும் ஒளி சுடர்விட்டுப்பிரகாசிக்கும நித்தய சீவியத்தின் வாயிலண்டை இழுத்துச் செல்வதாயிருந்தது. ஆராதனையை ஞாபகமூட்டுவதற்காக இரண்டொரு தினங்களுக்கு முன்னதாகவே யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலும, ஆலயவெளிப்புறங்களிலும் கொட்டை எழுத்துக்களிலே விளக்கங்கொடுத்துக் கணைக்கவரும் சித்திரப்படங்கள் காட்சியளித்தன.

ஆராதனை நடந்தேறிய மூத்தினங்களிலும் மாணவர்மாணவிகளுக்கெனக் காலை திவ்வியபூசைப்பலியும, மாலை சற்பிரசாதஆசீர்வாதமும பக்திக்குரிய விதமாக நடந்தேறின. ஒவ்வோர் வைபவத்திலும் வெவ்வேறு குருப்பிரசாதிகள "தேவதொண்டின மகிமை" யைப்பற்றி எலலோரும விளங்கக்கூடிய விதமாய் அறிவுரைகள் நிகழ்த்தினர். முதலநாள்ஆராதனை மழைகாரணமாக நடைபெறவில்லை.

இரண்டாம்நாள் வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலைஆராதனையில் வண. எம். ஜே. மரியாயபிள்ளை சுவாமியவர்கள் "தேவதொண்டு" புரியக் குருப்பிரசாதிகள் போதாமலிருப்பதால் தேவ அழைத்தல் கிட்டும்படியாகத் தேவனைப் பிரார்த்திக்கும்படி வேண்டி, அதனுல் உண்டாகும் நன்மைகளை எடுத்துக்கூறினுர். மாலைஆராதனையில் வண. எஸ். பீற்றர் சுவாமியவர்கள் குருத்துவத்திலும், சந்நியாசத்திலும் காணப்படவேண்டிய "பரித்தியாகம்" என்னும் பொருளைவைத்து வாலிபஉள்ளங்களில் பசுமரத்தாணிபோல் என்றும் மறக்கமுடியாதவிதமாய்ச் சுமார் நாற்பதுநிமிடநேரம பேசினுர்.

மூன்றும்நாள் சனிக்கிழமை நடைபெற்ற காலைஆராதனையில் வண. ஜே. பிரான்சிஸ் சுவாமியவர்கள் கல்வாரி மலையில் யேசுக்கிறீஸ்துநாதர் உலக மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுத்த சீவபலியையே குருவானவர் திருப்பவும் திவ்வியபூசையில ஒப்புக்கொடுக்கிறுர் என்றஉண்மையை விளக்கிக்கூறினுர். மாலை ஆராதனையிலே வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்கள் "தேவதொண்டு"க்கு அழைக்கப்படுவோருக்கு அவசியம் இருக்க வேண்டிய குணங்களை வாலிபர்களுக்குச் சுட்டிக்காட்டினுர்.

ஞாயிறன்று காலை 7-15 மணிக்கு மேற்றிராணியாண்டவர்அவர்கள் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றிச் செய்த பிரசங்கத்திலே துறவறப பூணும்ஆசை எவ்விதம் மனதில் தோன்றுமெனப தற்கு உதாரணமாக ஓர்சமபவத்தையும எடுத்துச்சொன்னுர். அதாவது, தாம் ஓர் குருவானவரைநோக்கி: நீர் குருவாய்வந்த விதத்தைப்பற்றிக் கூறும்படி கேட்டதாயும், அதற்கு அவர் தான் ஏழுவயதாய் இருக்கும் போது நிறைவேறிய ஓர்குருத்துவ திருச்சடங்கைப் பார்த்துவிட்டு, தானும் ஒருநாள் குருவாய்வரும் பாக்கியம் தனக்குக் கிட்டும்படியாக அன்று தொட்டுத்தானே தேவனைப் பிரார்த்திக்கத் தொடங்கியதாயும், பன்னிரு வருடங்களுக்குட்பின் அந்தப்பாக்கியம கிட்டியதாயும் கூறியதாகச் சொன்னுர். மேலும் ஆண்டவர்அவர்கள் பிறர்சிநேகத்தைப்பற்றிப் பேசி, தேவ அழைத்தல் கிட்டும்படியாக மடுமாதாவையும், விசேஷமாகத் தூயஆவியானவரையும் மன்றுடும்படி கேட்டுத் தமது ஞானப்பிள்ளைகளை ஆசீர்வதித்துத் திரிதின ஆராதனை பக்திக்குரியவிதமாய் முடிவு பெறச்செய்தார்.

— பங்குபற்றிய ஓர்இளைஞன்

## பெற்ருேர்தின விழா

சென்றகார்த்திகைமாதம் 26-ம்நாள் மயிலிட்டி சென் மேரீஸ் கத்தோலிக்க கலவன்பாடசாலைக்கு ஓர்பொன்னுளாகும். பெற்றோர்முகத்தை அறிமுகம் செய்த நன்னுளாகும். மாரிகாலமாதலின் வானம தனதுஇயற்கைச்சுபாவத்தைக்காட்டி ஊர்முழுவதையும் குளிப்பாட்டிக்கொண்டிருந்தது. மாலை 2 மணி. விழாவின் பெருமையைக்காணப் போலும் மழையும தன்னைமறந்துபோகவே பெற்றோர் பாடசாலையைநோக்கிச் சரிந்தனர். தலைமைஆசிரியை சங். சிஸ்றர் எம். இமெல்டா அவர்கள் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும திறம்படச்செய்யப்பட்ட பொருள்நிறைகாட்சிச்சாலையைத் திறந்துவைத்தனர்.

பின்னர் 3மணியளவில் மயிலிட்டிக் கட்டளைக்குரவர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள் தலைமையில் பெற்றோர்தினவிழா ஆரம்பமாயிற்று. மலர்மாலைஅணிந்த தலைவரை மாணவர் பலர் பாமாலைசாற்றி வரவேற்றனர். தலைவர் தமது தலைமைஉரையில பெற்றோர்தினத்தின் நோக்கம்பற்றி அழகாகப்பேசினர் பின்பு வித்தியாதரிசி திரு. வி. சண்முகநாதன் அவர்கள் இருநூறுக்குமேற்பட்ட பாடசாலைப்பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கினின்றனர்.

அதன்மேல் உதவிஆசிரியர் திரு. ஏ. அந்தோனிமுத்து அவர்களால் பாடசாலை அறிக்கை வாசிக்கப்பட்டதும் வித்தியாதரிசி அவர்கள்கல்வியின மேன்மை, மாணவர்களின் தராதரம, சூழல்என்ற விடயங்களைச்சேர்த்து ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் பருத்தித்துறைப் புதிய சிரேஷ்டபாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. கே. ரி. ஞானப்பிரகாசம்அவர்கள் பிள்ளைப்பாக்கியம, கல்விச்செல்வம், தொல்காப்பியத்தில் கூறப்பட்ட மாணவர்தரங்கள், பிள்ளை வளர்ப்புஎன்ற விடயங்களைத் தொகுத்துப் பாட்டும்பயனும்நிரம்பச்சொல்மாரி பெய்து சபையைப் பரிமளிக்கச்செய்தனர். அவரைத்தொடர்ந்து, ஆசிரியர் திரு. ஜே. கவிரியேற்பிள்ளை அவர்கள் பெற்றோர் – ஆசிரியர் ஒத்துழைப்பு, பிள்ளைகளின் வரவு ஒழுங்கீனத்தால் ஆசிரியர்களுக்கேற்படும கஷ்டங்கள், பிள்ளைகளுக்கு நீண்டபெயர்களைவைப்பதால் ஆசிரியரும், பிள்ளைகளும் படும்பாடு, பெற்றோரின் ஆட்டகாசப்பேச்சுகள்என்பனபற்றித் தொகுத்துப்பேசிச் சபையோரைக் குதூகலிக்கச்செய்தனர்.

பின்னர் மாணவர்களும், மாணவிகளும் டிறுமா, டிறில், நடனம், அபினயப்பா, மகிடிவிளையாட்டுகள், ஆங்கில விளையாட்டுகள் ஆகியவற்றுல் பெற்றோரையும், மற்றோரையும் மனங்குளிரச் செய்தார்கள். ஆசிரியை திருமதி கே. ரி. ஞானப்பிரகாசம் அவர்கள் தமது சொல்வாக்கால் எல்லோருக்கும் நன்றியுரைகூறினர். ஈற்றில், தேசியகீதத்துடன் விழா இனிதுமுடிவெய்தியது.

— யா. க.

## நன்றியறிதல் வாழ்த்து

கோடிவரம்நிறைந்த கோமகனுர் அர்ச். அந்தோனியாரின் திருநாமம் என்றென்றும் குன்றின்மேல் ஏற்றிவைத்த ஒளியென புகழ்ஓங்கித் துலங்குக. சென்ற ஆடிமாதம் 15-ந்திகதி அதிகாலை 3-30 மணிவேளை. எனதுவீட்டின் அருகில்உள்ள பெரியமீன்வாடியில் வஞ்சகப்பாவிகள் யாரோவைத்த தீயிலிருந்து எங்கள் உயிரையும், சிலஆயிரம்ரூபா பெறுமதியான பொருள்களையும் அழிக்க நேராய் வந்த அகோரஅக்கினிஅலையை நொடிப்பொழுதில் அற்புதமாய் மறுதிசைக்கு மடக்கி மாற்றி என்னையும், என்பொருள் பண்டங்களையும்காத்து இரட்சித்த என் தயவுள்ளதந்தை – அர்ச். அந்தோனியாரின் திருநாமம் என்றென்றும் இப்பூவுலகில் புகழ்பெருகி வாழ்கவே!

தலைமன்னுர் செ. செ. அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### முத்திப்பேறு பெற்றபட்டம்

லூர்துதிருப்பதிக் காட்சிகளின் நூற்றாண்டாகிய அடுத்துவருகிறதும் 1958-ம்ஆண்டிலே மூன்றுசுத்தவாளிகள்.முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவார்களென எதிர் பார்க்கப்படுகிறது. ஏனெனில், அவர்களுக்கு இத்திருப்பட்டத்தை அருளுவதற்கான விசாரணை அடுத்தவருடத்தில் முடிவடையும் போலிருக்கிறது. (1) கைவிடப்பட்டஏழைகளின்சிறியகன்னியாஸ்திரிமார்சபையை அடியிட்டவரும், 1897-ம் ஆண்டு மரண மடைந்தவருமான ஆசா.' சிஸ்றர் தெரேசா தேயேசு ஜோர்னெற்றி இபார்ஸ், (2) தூயஆவியானவரின் கன்னிகா பரித்தியாகிகள் சபையை அடியிட்டவரும், 1914-ம் ஆண்டு மரணமடைந்த வருமான ஆசா. எலேனு குவெரு, (3) பிறர்சிநேக கன்னியர்சபையைக் கனடாவில்அடியிட்டவரும், 1771-ம் ஆண்டு மரணமடைந்த வருமான ஆசா. மதர் மரியே துபு ரூஸ்ற் என்பவர்களே அம்மூவருமாவர்.

### பாப்பரசரின் மகிமைப்பட்டமும் அரசாங்க உத்தியோகஸ்தரும்

சுவிற்சர்லாந்திலே அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் பிறநாடுகள்வழங்கும் மகிமைப்பட்டங்களை ஏற்றுக்கொள்ளப்படாதென்று சட்டமூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் தடை பாப்பரசர்வழங்கும் மகிமைப்பட்டங்கள்மட்டிலே செல்லமாட்டாது. அங்கே பரிசுத்தபாப்பரசர் வழங்கிய அர்ச். கிறகோரியாரின் நைற்பட்டத்தை ஏற்றிருந்த கத்தோலிக்கபிரமுகரான திரு. எட்ரோ ஸ்ருடர் என்பவர், சமீபகாலத்திலே அங்நாட்டின்பாராளுமன்றத்துக்குக் கத்தோலிக்க பாரம்பரிய தேசியகட்சி அங்கத்தவராகத் தெரிவுசெய்யப் பெற்றிருந்தார். இவர் பாராளுமன்ற அங்கத்தவராய்இருந்தபோதிலும் பாப்பரசரின் நைற்பட்டத்தைத் தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கவேண்டுமென்று நீதிமன்றஞ்செய்த சிபாரிசைச் சுவிஸ் பாராளுமன்றம் அங்கீகரித்திருக்கின்றது. அதாவது, பாப்பரசரின் மகிமைப்பட்டம் அந்நியமானதல்லவென்பதை அது ஒப்புக்கொண்டிருக்கிறது.

### விசாரணைப்பங்கும் தேவ அழைத்தலும்

பாகிஸ்தானின் தலைப்பட்டணமாகிய கராய்ச்சிநகரிலுள்ள அர்ச். பத்திரிசியாரின் விசாரணைப்பங்கிலிருந்துகிடைத்துள்ள மகத்தான தேவஅழைத்தல்களின் விபரங்கள் அங்குபிரசுரமாகும் "கிறிஸ்துவனின்குரலொலி"என்றவெளியீட்டின் விசுவாசப்பரப்புதல் ஞாயிறுஇதழில் வெளிவந்துள்ளன. ஒவ்வோர் அழைத்தலையும்பற்றிய விபரத்திலே ஒவ்வோர் குருவானவரினதும், அல்லதுபிறதரினதும், கன்னியாஸ்திரியினதும் பெற்றோரைப்பற்றிச் சிலகுறிப்புரைகளும் வரையப்பட்டிருக்கின்றன. தற்போதுள்ள குருத்துவமாணவர்கள், நவசந்நியாசர்கள், கன்னியாஸ்திரிகள் நீங்கலாகத் 93குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரின் நாமங்கள் அதிலேதரப்பட்டுள்ளன. அர்ச். பத்திரிசியார் விசாரணைப்பங்கிலேதேவஅழைத்தல்களைப்பெற்றவர்களில் மிக மேம்பட்டவர்களாய் பம்பாய்நகர் கருதினால்வலேரியான் கிறுசியாஸ் அதிமேற்றிராணியாரும், பெல்காம்நகர் மிக்கேல் றொட்றிக்குஸ் மேற்றிராணியாரும், அமிதபாத் நகர் எட்வின் பின்ரேர் மேற்றிராணியாரும், அலகபாத்நகர் லேயோனாட் றேமண்ட்மேற்றிராணியாரும் விளங்குகின்றார்கள்.

### ஜனாதிபதியாகத் தெரியப்படுவாரா?

ஐக்கியஅமெரிக்க தேசத்திலே மசாசுசெற்ஸ்நாட்டின் ஜனநாயக கட்சிச் செனற்றராகவிளங்கும் திரு. ஜோண் கெனடி அவர்கள் இன்று அமெரிக்கமக்களின்கவனத்தை வெகுவாக ஈர்ந்துவருகின்றார். 1960-ம்ஆண்டிலே இவர்ஜனநாயககட்சியின் அபேட்சகராக ஜனாதிபதித்துவ தேர்தலுக்குத் தெரிவுசெய்து நிறுத்தப் படுவாரெனப் பிரஸ்தாபமாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு நிறுத்தப்படும்போது பெரும் பிரச்சினையொன்று குறுக்கிடும். அதாவது, செனற்றர் கெனடி அவர்கள் ஓர்கத்தோலிக்கர். அதிலும் தமதுசமயத்தைப் பிரசித்தமாக அனுசரித்துவரும் ஓர்உத்தமகத்தோலிக்கர். அதனால்இவர் ஜனாதிபதித்தேர்தலுக்கு நிற்கும்போது முன்புஇதேதேர்தலுக்கு நின்று தோல்வியுற்ற திரு. அல்பிறெட் சிமித்என்ற கத்தோலிக்க பிரமுகருக்கு நேர்ந்தகதிதான் இவருக்கும் ஏற்படுமோவெனச் சிந்திப்பாரும் இல்லாமலில்லை. தேர்தலின்போது புறொட்டஸ்தாந்தர்கள் சமயகிளர்ச்சிசெய்து இவரை எதிர்த்து வாக்களிக்கலாம். என்றாலும், திரு. அல்பிறெட்சிமித் அவர்கள்காலத்தில் இருந்தநிலைமை இப்போது எவ்வளவோமாற்றம் அடைந்திருக்கின்றது.

### மாதாவின் புராதனதிருநாள்

தேவமாதாவின் திருநாட்களிலெல்லாம் அதிகம்புராதனமான திருநாள் எது? ஆவணிமாதம் 15-ந்திகதியன்று கொண்டாடப்படுகின்ற மோட்சாரோபண திருநாளேயாகும். மேற்கத்திய திருச்சபைமுழுவதிலும் இது முக்கிய திருநாளாகவும், கடன்திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது. பிரிவினைச்சபைகளும், மற்றும் வேறுபாடான கொள்கைகளையுடைய சபைகளும் இதனைக் கொண்டாடிவருகின்றன. தேவதாயாரின் இந்த வருடாந்த திருநாள் எல்லாவற்றிற்கும் முதலாவதாகப் பலஸ்தீனாவிலேகொண்டாடப்பெற்றுவந்ததாகத் தோற்றுகிறது. கி. பி. 529-ம் ஆண்டு பெற்றாநகரின் தியடோர்மேற்றிராணியார் அர்ச். தியடோசியஸின் ஸ்துதிஒன்றிலே, பலஸ்தீன்நாட்டுச்சந்நியாசிகள் தேவதாயாரின் ஞாபகார்த்த திருநாள் ஒன்றை விசேட பக்திபற்றுதலோடும், ஆடம்பரமாகவும்வருடந்தோறும் கொண்டாடி வந்தார்களென்று எழுதிவைத்திருக்கின்றார். அதன்படி இந்தத்திருநாள் ஆவணி மாதம் 15-ந்திகதியன்றே கொண்டாடப்பட்டு வந்ததென்று புராதனபாரம்பரியம் கூறியபோதிலும், மோறிஸ் சக்கிரவர்த்தி 602-ம் ஆண்டு இந்தத்திகதியை நிச்சயப்படுத்திக் கிழக்குச்சக்கிராதிபத்தியம் முழுவதுக்கும் இத்திருநாளை ஓர்விடுமுறைநாளாக்கினார். ஹங்கேரியதிருச்சபை இதனை ஓர்தேசீய விடுமுறைநாளாக்கிப் பெருநாளாகக் கொண்டாடி வந்தது. பாரம்பரியம் கூறுகிறபடி, ஹங்கேரியதேச அர்ச். ஸ்ரீபின் அரசர் தமது பூசித இராசகிரீடத்தை இந்தத் திருநாளிலே மாதாவின் பாதங்களில் காணிக்கை வைக்கவே, தேவதாயார் ஹங்கேரியின் இராக்கினியும், பாதுகாவலுமாயினார். அத்தேசத்தில் மாதாவும் "ஹங்கேரியர்களின் பெரியமாதா" என்று அறியப் பெற்று வருகின்றார்.

### சத். அயர்லாந்தும் பாதிரியாரும்

அயர்என்றுஅறியப்படும் ஐரிஷ் குடியரசுநாடு ஓர் கத்தோலிக்க நாடாகும். இதுதான் சுதந்திர தென்அயர்லாந்து. "இந்த ஐரிஷ் குடியரசுநாட்டின் அரசாங்கம் அங்கு புறொட்டஸ்தாந்தர்கள் தங்கள் சொந்தப் பங்குவிசாரணைப் பாடசாலைகளைக் கொண்டிருக்க அனுமதிக்கின்றது; பெரும்பாலும் பத்து மாணவர்களையே இடாப்பிற்கொண்டுள்ள புறொட்டஸ்தாந்தபாடசாலைக்கும் பயிற்சி பெற்றஓர்ஆசிரியரின் சம்பளத்தை வழங்கின்றது; புதிதாக ஓர் புறொட்டஸ்தாந்த பாடசாலை கட்டப்படவேண்டியிருக்கும்போது அரசாங்கம் அதற்கு ஏற்படுஞ் செலவுபணத்தில் ஆறில் ஐந்து பங்கை உதவுகின்றது; பாடசாலைகளைக் காங்கைப்படுத்துவதற்கும், சுத்தஞ்செய்வதற்குமாக உபகாரப்பணம் கொடுக்கப்படுகிறது; அயர்நாட்டிலே புறொட்டஸ்தாந்தர்கள் கௌரவமாகவும், கண்ணியமாகவும் நடத்தப்படுகிறார்கள்" என்று அங்கு பானக்கர்நகரின் புறொட்டஸ்தாந்த தலைமைப் பாதிரியாரான கனம். எஸ். ஆர். ஜென்னிங்ஸ் அவர்கள் புறொட்டஸ்தாந்த வடஅயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய பெல்பாஸ்ற்நகரிலே சமீபத்தில் பேசியபோது தெரிவித்திருக்கின்றார்.

### கம்யூனிஸ்தரின் புதியபட்டணம்

போலாந்திலுள்ள மிகப்பெரிய உருக்கு ஆலையைச் சூழவரக் கிறுக்கோநகரின் எல்லைப்புறமாக யுத்தம் முடிந்தபின் அமைக்கப்பெற்ற நோவா ஹாற்று என்ற புதிய பட்டணமானது கோவில் என்பதே இல்லாது முற்றுமே கம்யூனிஸ்த மயமாய்ப் பிரதிபலிக்க வேண்டுமெனத் திட்டமிட்டு அடியிடப்படலாயிற்று. ஆனால், சென்றவருடம் ஐப்பசி மாதம் இரத்தஞ்சிந்தாமலே போலாந்தில் நடந்தேறிய அரசியற்புரட்சியில் ஸ்ராலினிஸ்த ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் அப்பட்டணவாசிகள் அங்கிருந்த கோவிலில்லாக் குறையை நிவிர்த்திசெய்யத் தீர்மானித்தார்கள். போலாந்தின் இராக்கினியான தேவதாயாருக்கு மகிமையாக அந்தக் கோவிலைக் கட்ட முனைந்து, அதற்குத் தலைசிறந்த மாதிரிப்படம்ஒன்றைத் தயாரிக்குமாறு நிர்மாண சிற்பிகளிடையே போட்டிஒன்றை நடத்தினார்கள். அதிலே பரிசில்பெற்ற சிற்பியின் மாதிரிப்படத்தைக்கொண்டு தங்கள் பட்டணத்தில் ஓர் அழகான கோவிலைக் கட்டியெழுப்புகின்றார்கள்.

### வத்திக்கானின் உத்தரவுகளிலும்பார்க்க

கம்யூனிஸ்தஹங்கேரியின் கல்வி மந்திரியான திரு. ஜியோலா கல்லாய்என்பார் அன்றுஞாயிற்றுக்கிழமை புடாபெஸ்ற்நகரில் நடந்த ஓர் கூட்டத்தில் பேசியபோது: "ஹங்கேரிய அரசாங்கத்துக்கும், வத்திக்கானுக்கு மிடையேயுள்ள உறவுகள் சமீபகாலத்தில் எவ்வளவோதிருத்தம் அடைந்திருக்கின்றன; ஆனால், இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியிருக்கின்றன; வத்திக்கானின் உத்தரவுகளைக்காட்டிலும் அரசாங்கத்தின் உத்தரவுகள் அதிகம்புனிதமானவையென்பதை நமதுகுருமார் உற்றறியவேண்டும்; அவற்றின்படி நாட்டின்மட்டிலேதங்களுக்குள்ள கடமைகளைக் குருமார்செய்துவரவேண்டும்"எனக் கூறலாயினர்.

### ஐந்துசபைகளை அடியிட்டவர்

ஐந்து சந்நியாச, கன்னிகாசபைகளை அடியிட்டவரான ஓர்குருவானவர் இன்னுமே சீவந்தராய் இருந்துவருகின்றார். இத்தாலியைச்சேர்ந்த வண. கியாக்கோமே அல்பெறியோன் சுவாமியாரே அந்தக் குருவானவர். 1. அர்ச். பாவிலுவானவர்சபை, 2. அர்ச். பாவிலுவானவர் குமாரத்திகள் சபை, 3. தெய்வீக எசமானின் பக்தியுள்ள சிஷ்யர்கள் சபை, 4. பஸ்றறல் கன்னிகாசபை, 5. தொழிற்பயிற்சிக் கன்னிகா சபை என்பனவே இந்த ஐந்து சபைகளுமாகும். இவைகளெல்லாம் பிறநாடுகளிலும் ஏற்கனவே பரந்துள்ளன. சமீபத்தில் பக்தியுள்ள சிஷ்யர்கள்சபை ஆஸ்திறேலியாவிலும் தனது மடம்ஒன்றை அடியிட்டுள்ளது. வண. அல்பெறியோன் சுவாமிகளின் மற்றும் மூன்றுசபைகள் அங்கு ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

### ஐரிஷ்காரரான மிஷனரிமார்

அயர்லாந்தில் வசிக்கும் ஒவ்வோர் 450 கத்தோலிக்கருக்கும் ஒவ்வோர்மிஷனரிமார்வீதம் வேதபோதகநாடுகளில் தொண்டாற்றி வருகின்றார்களென விசுவாசப்பரப்புதற்சபைத் திருச்சங்கத்தால் றோமாபுரியில் புள்ளிவிபரம் வெளியிடப்பட்டிருக்கிறது. வேதபோதகநாடுகளில் 2,000 பேருக்கு மேற்பட்ட தனதுகுருமாரையும், 4,000 கன்னியாஸ்திரிமாரையும், 400 பிறதர்மாரையும் கொண்டுள்ள அயர்லாந்து மற்றெந்தநாடுகளைக்காட்டிலும் வேதபோதக நாடுகளுக்கு அதிகமான மிஷனரிமாரை உதவிவருகின்றது. அது குருமார்மட்டில்மாத்திரம் தொகையளவில் நான்காவதிடம் வகித்திருக்கிறது. மிஷனரியகுருமார்விஷயமாய்ப் பிரான்ஸ் 3,400 பேரையும், பெல்ஜியம் 2,300 பேரையும், ஹலந்து 2,250 பேரையுங்கொண்டனவாய் முறையே முதல்மூன்று இடங்களையும் வகித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மார்கழி மாதம்

திவ்வியபாலனை யேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்,

**பொதுக்கருத்து:** ஞாயிறு, கடன் திருநாட்களை ஆசாரத்தோடும், பக்தியோடும் அனுசரித்து வரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** கீழ்க்கோடி நாடுகளில் பொதுவுடைமை வாதிகளால் அவதியுறுவோருக்காக மன்ருடிக் கொள்வது.

சத்தியவேத

## பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
மார்கழிமாதம் 5-ந் திகதி

## வேலைநிறுத்த அபாயம்

அலைமேல்அலைகள் அடித்துப் புரண்டு மலைகள்போல எழுந்தாற்போன்று ஸ்ரீலங்காவிலே இன்று வேலைநிறுத்தங்களென்ற பயங்கரஅலைகள் கரைபுரண்டெழுந்து அடித்துமோதிக்கொண்டிருக்கின்றன. பிரதமர் தலையிட்டு ஒருவேலைநிறுத்தத்தைச் சமாளித்துக் கருமம்பார்க்குமிடத்துப் புதிதாக ஒன்றுக்கு இரண்டுமூன்று வேலைநிறுத்தங்கள் குமுறிக்கொண்டெழுகின்றன. கொழும்புத் துறைமுகத்திலே ஒருவேலைநிறுத்தம் சமரசமாகத் தீர்க்கப்பட்டு விட்டதென்று சந்தோஷப்பட்டுச் சாந்தியடையுமுன்னரே திடீரென மற்றோர் வேலைநிறுத்தம் பரந்துகொள்ளுகிறது. தற்போதுநடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்களுடன் மற்றும் 32 வேலைநிறுத்தங்கள்காத்துக்கொண்டிருக்கின்றனவாம். துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தங்களாலே இலங்கையின் பொருளாதாரமே பாதிக்கப்பட்டு விடுமோ என்றஅச்சம் எழுகின்றது. ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்குமாகக் கொழும்புத் துறைமுகத்தினுள்ளும், அதற்குவெளியிலும் ஐம்பதுகப்பல்கள்வரையிலே நிற்கின்றன. இவற்றுள் தேயிலை, றப்பர், தேங்காய்ப்பூ ஆதியாம் இலங்கை விளைபொருட்களை ஏற்றிச்செல்லக் காத்துநிற்பனவும், அரிசி, மா, சீனி, கரிஆதியன இறக்கிச்செல்லக் காத்துநிற்பனவும் அடங்கியுள்ளன. துறைமுகத்தின்மோசமானநிலைமை இவ்வாருகக் கொழும்புநகரசபைத் தொழிலாளர்களான 7,800பேர் சென்றவெள்ளிக்கிழமை நள்ளிரவு திடீரென வேலைநிறுத்தஞ் செய்தகாரணமாக நகரின்அத்தியாவசியசேவைகள் தடைப்படலாயின. அதனால், நகரமுழுவதும் இருதினங்களாக ஒரேதுர்நாற்றம்எழுந்து, குப்பைகூளங்கள் தெருவுக்குத்தெரு, மூலைக்குமூலை மலை போலக்குவிந்து; சேரிகள், சந்தைகள் மிகமோசமான நிலைமையடைந்து, மலகூடப்பிரச்சினைபிறந்து நகரமே நரகமாக்கும்போல் இருந்தது. இதேமாதிரிநிலைமை இன்னும் இரண்டுநாட்களுக்கு நீடித்திருப்பின் பின்னர் பேசவேண்டியதில்லை. இராணுவத்தினர் அழைக்கப்பட்டுவந்து தீவிரமாகக் கடமைபார்த்தமையால் ஒருவாறுநகரம் பாதுகாக்கப்பட்டது. மலைநாட்டுத்தோட்டங்களிலும், மற்றும்ஸ்தாபனங்களிலும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள வேலைநிறுத்தங்களுக்கும், செய்யப்போவதாகத் தவணைகுறித்து அச்சுறுத்திக்கொண்டிருக்கும் பலவேலைநிறுத்தங்களுக்கும் அரசினர் பரிகாரங்காணவேண்டின் செய்யவேண்டியது, நாட்டிலே அதிகரித்துக்கொண்டிருக்கும் வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதேயாகும். மற்றப்படி அரசாங்கம் வேலைநிறுத்தஞ் செய்வாருக்கெல்லாம் அவர்கள்கேட்கிறபடி சம்பளங்களையும், வாழ்க்கைப் படிச்செலவுகளையும் உயர்த்துகிறதாயிருந்தால் மருமக்களுக்கும், குடிமக்களுக்கும் கொடுத்து அண்டாதவாருகத்தான் மீட்டும் மீட்டும் அதிக சம்பளக்கோரிக்கைகளும், வேலைநிறுத்தங்களும் உண்டாக வழியேற்படும். வேலைநிறுத்தங்களைச் சமாளிக்கும்படியாய் — வாழ்க்கைச் செலவைக் குறைக்கும்படியாய் எடுபட்டுள்ள நடவடிக்கைகளில்ஒன்ருய் இந்தியாவிலிருந்து ஈரவெங்காய இறக்குமதித்தடையை நீக்கியிருப்பதானது யாழ்ப்பாணத்திலே ஈரவெங்காயம் உற்பத்திசெய்வாரின் வயிற்றில் அடித்ததுபோன்ற ஓர்விபரீத செயலாகும். இலங்கையின் தேவைக்குப்போதிய ஈரவெங்காயம் யாழ்ப்பாணத்திலே கையிருப்பாய் இருக்க — அதாவது ஒருலட்சம் அந்தருக்குமேற்பட்ட வெங்காயம் கையிருப்பாய்இருக்க, இந்த இருப்புத் திட்டத்தை அறிந்துகொள்ளாது இந்திய ஈரவெங்காய இறக்குமதித்தடையை நீக்கிவிட்டமை அநீதியான ஓர் செயல்மாத்திரமல்ல, யாழ்ப்பாண மக்களின் புண்பட்டமனத்தை மீட்டும் புண்படுத்துவதான செயலுமாகும். நிற்க, கொழும்புநகரசபைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ்செய்யப்போய்க் கொழும்புநகரசபையே சென்ற திங்கட்கிழமை நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. கொழும்புநகரசபை கலைக்கப்பட்டிருப்பது இலங்கைச்சரித்திரத்தில் இதுவே முதன்முறையாகும். இதுசெய்தியை அறியவந்ததும் எதிர்க்கட்சித்தலைவர் டக்றர் என். எம். பெரேரு அதிர்ச்சியடைந்து விட்டாராம். "அரசாங்கம் சகலவிஷயங்களையும் ஒன்ருகப்போட்டுக் குழப்பியடித்துவிட்டது; நகரசபையைக்கலைத்ததன்மூலம் நகரசபைத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை அதுஎவ்வாறு தீர்க்கப்போகிறது? நகரசபைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் அச்சபை கலைக்கப்படக்காரணமாயிருந்தால் அதேகாரணத்தைக்கொண்டு பாராளுமன்றத்தைப் பலதடவை கலைத்திருக்க வேண்டுமே" எனக் கூறினுராம். பிரதமர் பண்டாரநாயகாவின் அரசாங்கத்துக்குக் கடுஞ்சோதனையான ஓர்காலம் இதுவாகும். அலையலையாகத் திரண்டுகொண்டிருக்கும் வேலைநிறுத்தங்களையும், மற்றும்பல்வேறு பிரச்சினைகளையும் அதுஎவ்வாறு சமாளித்துக்கொள்ளுமோ தெரியவில்லை.

# நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?

மூலம்: ஆண்டகை ஷீன் அவர்கள்] [தமிழாக்கம்: A. W. J. சந்திரசேகரா

நீங்கள் பூரணமகிழ்ச்சியோடு இருக்கிறீர்களா? இன்றேல், அது எங்கே இருக்கிறது என்று தேடிக்கொண்டிருக்கிறீர்களா? "நான் இப்படிவந்தால எவ்வளவு சந்தோஷமாய் இருப்பேன்" என்று எதற்காகவோ ஏங்கியிருப்பீர்கள். நீங்கள் விரும்பியது உங்களுக்குக் கிடைத்திருக்கவுங்கூடும். நல்லது, அப்போதாவது நீங்கள் பூரண சந்தோஷத்தை அனுபவித்தீர்களா?

நீங்கள் குழந்தைகளாயிருந்த காலத்தில் நத்தாலவிழாவை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்தீர்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். உங்கள் சட்டைப்பைகள் நிரம்பச் சுவையான உணவுப்பொருள்களும், கைகள்நிரம்ப விளையாட்டுப் பொருள்களுமாக உங்கள்கண்கள் மகிழ்ச்சியால் ஒளிவீசவில்லையா?

நத்தாலவிழா வந்தது. நன்ருகச் சாப்பிட்டிருப்பீர்கள். விளையாடியிருப்பீர்கள். இன்னும் என்னென்னவெல்லாம் செய்திருப்பீர்கள். விழா முடிந்தது. உங்கள் இருதயத்தைப் பரிசோதனைசெய்து பார்த்திருப்பீர்கள், "நத்தால் நாட்களில் மகிழ்ச்சியாய் இருந்தீர்களா?" என்று. நத்தால் வருவதற்குமுதல் நீங்கள் என்னென்ன திட்டங்கள் தயார் செய்திருந்தீர்களோ அவ்வளவுக்கு நீங்கள் பூரணசந்தோஷத்தை அனுபவிக்கவில்லையென்ற பதில்தான் கிடைத்திருக்கும்.

"எங்கேயாவது விடுதலைநாட்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்வது எவ்வளவு இன்பமாகஇருக்கும்!" என்று நினைத்துச் சுற்றுப்பிரயாணத்துக்குக் கிளம்பியிருப்பீர்கள். பிரயாணம்முடிந்து வீடு திரும்பியவுடன் "சுற்றுப்பிரயாணத்துக்குக் கிளம்பியநாளும், மறுபடிவீடு திரும்பிய நாளும்மாத்திரம் எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தந்தன" என்று நீங்களே ஒப்புக்கொண்டிருப்பீர்கள்.

இல்லாவிடின் விவாகஞ் செய்துகொள்வதுதான் மகிழ்ச்சியாயிருப்பதற்கு வழியென்று நினைத்து நீங்கள் விவாகஞ் செய்திருக்கலாம். கல்யாணம் ஓரளவிற்கு உங்களுக்குச்சந்தோஷத்தை அளித்திருக்கும். "முழுச் சந்தோஷம், அதாவது கவலையே இல்லாத பூரண இன்பவாழ்க்கையாகவா கல்யாணவாழ்க்கை இருந்தது?" என்று கேட்டால், "இல்லை" என்றுதான் சொல்வீர்கள். செல்வம் இருந்தால் சந்தோஷமாக வாழலாம்என்று எண்ணியிருப்பீர்கள். அந்தச் செல்வத்தை இழந்துபோகாமலிருப்பதற்கு வழியென்ன? என்றகவலை அதனுடன் சேர்ந்துகொள்கிறது இல்லையா?

உண்மை என்னவென்ருல், நீங்கள் இந்தஉலகத்திலே எல்லாஇன்பங்களையும் பூரணமாகஅனுபவிக்க ஆசைப்படுகிறீர்கள். அப்படிவாழ முடிவதில்லை. உங்கள்வாழ்க்கையில் ஏமாற்றங்களும், அதிர்ச்சிகளும் குறுக்கிடுகின்றன. இவற்றிற்குமாறுபாடாக நீங்கள்செய்வது என்ன? உங்களை விட்டுவிட்டு உங்கள்ஏமாற்றங்களுக்குக் காரணமாக உள்ளவற்றின்மீது பழியைப் போடுகிறீர்கள். விவாகஞ் செய்திருந்தால், "ஐயோ! நான் வேருெருபுருஷனை (பெண்ணை)க் கல்யாணஞ் செய்திருந்தால் எவ்வளவுசந்தோஷமாக இருப்பேன்" எனகிறீர்கள். இல்லாவிடில் "அட, எனக்கு வேறுஉத்தியோகம் கிடைத்திருந்தால் இப்படியா இருப்பேன்?" என்று அங்கலாய்க்கிறீர்கள். இப்படி ஒவ்வொன்றிலும் மகிழ்ச்சியை நீங்களாகவே தூரவிலக்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, நீங்கள் சந்தோஷமாக இருக்க முடிவதில்லைஎன்பதில் ஆச்சரியமில்லை. மரணம் வரும்வரையும் திருப்தி என்பதே இல்லாமல் பிரமைகளுக்குப்பின்னுல ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்.

இப்படியாக வாழ்க்கையின் இன்பங்களைத் தேடி நீங்கள் அலைந்துகொண்டிருக்கும்போது சந்தோஷத்தை எப்படி அனுபவிக்கமுடியும? இன்பம் தேகசம்பந்தமுடையது மகிழ்ச்சி ஆத்மா — அதாவது உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. இன்பமஅனுபவிப்பதில நீங்கள்விரைவில அலுப்படைந்துவிடுகிறீர்கள். மகிழ்ச்சியில அலுப்பு என்பது தோன்றுவதேயில்லை. குறிப்பிட்ட அளவுக்குத்தான இன்பம் அனுபவிக்கலாம். மீறினுல் இன்பம் கசக்கிறது. ஒரு பானத்தைப் பருகுவதில் நீங்கள் இன்பம்காணுகிறீர்கள். இப்படியே தொடர்ந்து பருகிக்கொண்டிருக்க முடிகிறதா? அலுத்துப் போகிறதில்லையா? இதற்கு மாருக நீங்கள் ஆராய்ச்சிசெய்து ஒருஉண்மையைக் கண்டுபிடிக்கிறீர்கள். அதிலுள்ளசந்தோஷம வேறுஎதில்உண்டு? ஆயிரமாயிரந்தடவைகள் அதைப்பற்றி யோசித்தாலும அலுப்புத் தட்டாது. மேலும் இன்பத்தின்மீது உங்களுக்கு ஆசை அதிகமாகஅதிகமாக, அதனுல் உண்டாகும் திருப்தி குறைவதைக் கவனித்திருக்கிறீர்களா?

"நல்லகாலம் வந்துவிட்டது" என்று கூறுகிறீர்கள் ஆனுல், உண்மையிலே சந்தோஷவாழ்க்கைக்கு எதிரிடையாக இருப்பது காலந்தான. மனோவேகமாகப் பறந்துசெல்லும் காலத்தைக் கவனியாதிருக்குமட்டுந்தான் நீங்கள் கவலையற்று இருப்பீர்கள், கடிகாரத்தை நீங்கள்நோக்குவதும், கவலை உங்கள்உள்ளத்தில் இடம்பெறுவதும் ஒரேசமயத்தில்தான். "அடே, நேரம் போனதே தெரியவில்லையே!" என்று ஆச்சரியத்துடன் கூறுகிறீர்கள், சுவாரஸ்யமான சீட்டாட்டம் முடியும் போது. எனவே, மகிழ்ச்சிக்கும், நித்தியத்துக்கும் தொடர்பு இருக்கிறது என்பது விளங்குகிறது இல்லையா?

நீங்கள் வாழ்க்கையின் ஏமாற்றங்களுக்கு ஆளாகும்போது உங்கள் உள்ளத்தில் இடம்பெறும் வேறு[illegible]பட்ட உணர்ச்சிக்கு நியா[illegible] உண்டு. அச்சமயம் "நான்ஏன் [illegible]மாற்றமடைந்தேன்? இ[illegible] அதை எப்படித் தடுக்கலாம்" என்று உங்களையே கேட்டுக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் ஏன் ஏமாற்றத்துக்கு ஆளாகிறீர்கள்? உங்கள் விருப்பங்களுக்கும், இலட்சியங்களுக்கும், அதனுல் ஏற்படும் பயன்களுக்குமிடையே வேற்றுமை இருப்பதால்தான், நீங்கள் முழுவதும்பொன்னுலான ஒருமலையைக் கற்பனைசெய்ய முடியும்; கண்களால்பார்க்கமுடியுமா? முடியாது! ஏனென்ருல், உள்ளம் நித்தியமானது; எல்லையற்றது. அதனுல், எதையும் கற்பனை செய்ய முடியும். ஆனுல், கண்கள் தேகத்தின்உறுப்புகளில் ஒருபகுதி. தேகம் நித்தியமில்லாதது. அழிந்துபோகக்கூடியது. அதனுல், உள்ளத்துக்கு இருக்கும் சக்தி கண்களுக்குஇல்லை. இந்த மாதிரித்தான நீங்கள் உள்ளத்தால் ஒன்றை விரும்புகிறீர்கள். நீங்கள் விரும்பும் பொருளையோ, நிலையையோ அடைந்தால்கூட இலட்சியத்தை அதில் காணவோ, அனுபவிக்கவோ முடிவதில்லை. ஏமாற்றமே காண்கிறீர்கள். மேலும்மேலும் அளவுகணக்கின்றி உங்கள்உள்ளம் ஆசைப்படுகிறது. ஒன்றும் உங்களுக்குத் திருப்தியளிப்பதில்லை.

"ஏமாற்றத்தைத்தடுப்ப[illegible]தெப்படி?" என்று யோசனைசெய்கிறீர்கள் எவ்விதசந்தோஷத்தையும் பூரணமாக அனுபவிப்பதிலேயே கருத்தாயிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண. எஸ். ஜி. இல்லறி சுவாமியார்

பேசாலை உதவிக்கட்டளைக்குரவராய் இருந்துவந்தவரான வண. எஸ். ஜி. இல்லறிசுவாமியவர்கள் பருத்தித்துறை உதவிக்கட்டளைக்குரவராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரென அறிகின்றோம்.

## லோறிகளில்சென்ற வெங்காயம்

எஸ். எம். மீரான் சாகிபு என்பவருக்குச்சொந்தமான லொறியொன்று 147 மூடைவெங்காயத்தையும, முகமதலி அப்துல்அலி என்பவருக்குச்சொந்தமான லொறியொன்று 114மூடைவெங்காயத்தையும் சென்ற சனிக்கிழமையன்று கள்ளத்தனமாய் ஆனையிறவுப் பாலத்துக்கப்பால் கடத்திச்சென்றபோது பொலிசாரால் கண்டுபிடித்துச் சாவகச்சேரி நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வெங்காயத்தை வடபகுதி விவசாயஉற்பத்தியாளர் ஐக்கியசங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு நீதிபதிதெரிவித்து, லொறிகளின் சொந்தக்காரர் இருவருக்கும் ஒவ்வோர் லொறிக்கும் 3,000 ரூபாபிணை கட்டிவிட்டு அவைகளை எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். சாரதிகளும், கிளீனர்களும் தலைக்கு ஆயிரம்ரூபா பிணையில் விடப்பட்டிருக்கிறார்கள்.

---

✻ சேர்க்கஸ்விளையாடுவோருக்கும் பாதுகாவலராக ஓர் அர்ச்சியசிட்டர் இருக்கின்றாரா?

ஆம், அர்ச். ஜூலியன் அவர்களின் பாதுகாவலராக இருக்கின்றார்.

---

கிறீர்கள். தூய்மையான வாழ்க்கை, தூய்மையான அன்பு, தூய்மையான உண்மையை விரும்புகிறீர்கள். இச்சமயத்திலே இவைமூன்றும்தான "கடவுள்" என்பதை நீங்கள் உணரவேண்டும். கடவுளை நன்றாகஅறியாதிருக்கும்போது நீங்கள் ஏமாற்றமடைவதில ஆச்சரியமில்லை எனவேதான் பூரண சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டி நீங்கள் கடவுளைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். அவர்தான் எதிலும் பூரணமாகஇருக்கிறார். எதையும் பூரணமாக அனுபவிக்கத்தான் கடவுள் உங்களைச் சிருஷ்டித்தார் என்பதை நீங்கள் உணரும்போது, உங்கள் ஏமாற்றங்கள் திடீரென்று குறைவதை நீங்கள் காண்பீர்கள். எதிலும் பூரணத்தைக் [illegible]ண்பீர்கள். ஆனால், அநேகர் அவ[illegible]ராகரித்து மறுப்பதால் ஏமாற்றத்தைக் கா[illegible]கிறார்கள்.

உங்கள் உணர்ச்சிகள்தான் திருப்தியடைந்தாலும், நீங்கள் உலகத்திலே திருப்தியைக் காணமுடியாது. உங்கள் இருதயத்தைப் பாருங்கள். அது உருவத்தில் "வாலன்ரைன் ஹார்ட்" மாதிரிப் பூரணமாகஇல்லை. அதன் கிழ்ப்பாகத்தில் ஒருபகுதி எடுத்துவிடப்பட்டமாதிரி இல்லையா? கடவுள் மானிட இருதயத்தைச் சிருஷ்டித்தபோது, அது அவ்வளவு அழகாகவும், நன்றாகவும் இருந்தபடியால் தானோ என்னவோ, அதில் ஒருசிறு பகுதியைத் தம்முடன் மோட்சத்தில் வைத்துக்கொண்டிருந்திருக்க வேண்டும் மற்றப்பகுதியை அவர் பூலோகத்துக்கு அனுப்பியதன்காரணம், உலகத்தில் அவருடைய பரிசுகளை அனுபவித்து மறுபடியும் அவரைத்தேடிப் பரலோகத்துக்குவரும் படிகளாக உபயோகிப்பதற்காக இருக்கலாம். அதேசமயம் இந்த உலகத்தில் ஒன்றையும் நீங்கள் முழு இருதயத்துடன் விரும்பமுடியாது. (ஏனென்றால், உங்கள் இருதயந்தான் பூரணமாக இல்லையே!) உண்மையாக நீங்கள் பரிபூரணமகிழ்வை அனுபவிக்க வேண்டியிருந்தால், மோட்சத்தில் மாத்திரம் (இருதயத்தின் இருபகுதிகளும் இணைந்தபின்பு) அது சாத்தியப்படும். இவற்றை நிரூபிப்பதற்காகத்தான் கடவுள் அப்படிச் செய்தார் எனலாம்.

# ஓர் சம்பாஷணை

**ஜோண் :—** அண்ணா! இப்பொழுது சில தினங்களாக நான் தங்களைக் காணவரும்போதெல்லாம் நீங்கள் ஏதோ வாசித்தவண்ணமாகவே இருக்கின்றீர்களே. அதென்ன உங்கள்கையில் இருப்பது?

**பீற்றர் :—** தம்பி! நமக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தில் வீண்பேச்சுப்பேசிப் பொழுதுபோக்குவதைவிட, ஞானத்தையும், நல்லஅறிவையும் கொடுக்கக்கூடிய புத்தகங்களையும், பத்திரிகைகளையும வாசித்து, எமது அறிவை விருத்திசெய்துகொள்வது உசிதமல்லவா? அதனால்தான் "சத்தியவேத பாதுகாவலன்" என்ற பிரசித்திபெற்ற கத்தோலிக்கபத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கின்றேன். நீயும் இப்பத்திரிகைக்கு ஓர்சந்தாதாரராய்ச் சேர்ந்தாலென்ன?

**ஜோண் :—** ஓஹோ, அப்படியா! தங்களைப்போன்ற தனவந்தர்களுக்குப் பலபத்திரிகைகளும் அவசியம் வேண்டியதுதான் ஆனால், என்போன்றோர்க்கு அதுகூடாதகாரியம. "குடிப்பதுகூழ் கொப்பளிப்பது பன்னீரா?" என்தகப்பனுக்குக் கிடைக்கும்வருமானம் குடும்பசெலவுக்கே போதாமல கடன்படவேண்டியிருக்கிறது. இந்தநிலைமையில் நம்மூர்ப்பங்குச்சுவாமியவர்களின் சொல்லுக்கிணங்கிக் "கத்தோலிக்கு சேவை"யின் சந்தாதாரனாய்ச் சேர்ந்துள்ளோம். அது போதாதென்று வேறுபத்திரிகையும் வாங்கவேண்டுமா? போதும்போதும், நான்போய் வருகிறேன்.

**பீற்றர் :—** நில்தம்பி, நில்! அவசரப்படவேண்டாம். நீ நினைப்பது பெருந்தவறு. பத்திரிகைகளெல்லாம் பணக்காரருக்குத்தான் அவசியம் வேண்டுமெனச் சொன்னாயே. அப்படியல்ல. ஞானத்தையும், நல்லஅறிவையும்புகட்டும் பத்திரிகைகளை அரசன்முதல் அடிமைவரைவாசிப்பது சாலச்சிறந்ததாகும். அப்பத்திரிகைகளிலுள்ள விஷயங்களைவாசிப்பதால் சமாதானமும், சந்தோஷமும் ஏற்படுவதோடு இம்மைக்கும், மறுமைக்குமான வேறுபலநன்மைகளையும் அடையலாம். அதுபற்றியே நமதுபரிசுத்தபிதாபன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசரும ஒருகால் "நல்லபத்திரிகைகளுக்கு அவசியமாயின் நமது பூசைப்பாத்திரத்தையும் விற்றுக்கொடுக்கத் தயாராயிருக்கிறோம்" என மொழிந்திருக்கின்றார். அதனால், பத்திரிகைவாசினை எத்துணை நல்லதும், அவசியமுமானதென்று எண்ணிப்பார். நமது ஞானமேய்ப்பர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளுள் ஒன்று வருகிறதே. அதுஒன்றுமாத்திரம் போதுமென்று எண்ணிவிடக்கூடாது. ஏனெனில், ஞான விஷயங்களேயன்றிக் குடும்ப விஷயங்களையும், மற்றும் அரசியல்விஷயங்களையும் நன்கு தெரிந்துகொள்வதற்குப் "பாதுகாவலன்"போன்ற நலலகத்தோலிக்க பத்திரிகைகள் நம்மைப்போன்றவர்களுக்கு அவசியம்வேண்டும்.

**ஜோண் :—** ஆமா, ஆமாம்! வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று சொல்லிவிடுவது எளிதுதான். பணம்கொடுப்பதிலல்லோ கஷ்டமிருக்கிறது. நீங்கள் என்னசொன்னாலும் ஒன்றுக்குமேல் வாங்க என்னால்முடியாது அண்ணா.

**பீற்றர் :—** தம்பி! நீ என்ன நமது கத்தோலிக்க பத்திரிகைஒன்றை ஆதரிப்பதற்கு இத்தனை ஆட்டமுறுகிறீர். தினமும் நாம் எத்தனையோ வீண் செலவுகள்செய்கின்றோம். அவைகளையெல்லாம் கணக்கிட்டுப்பார்க்கிறோமா? ஆனால், நாம் இந்தஞானப்பத்திரிகையாகிய "காவல"னுக்குக் கொடுக்கப்போகிறது ஒருவருடத்திற்கெல்லாம் எட்டு ஒருரூபா தானே. அதைக் கணக்கிட்டால் ஒருநாளுக்கு இரண்டுசதந்தானே. ஆனால், இச்சொற்பகாசால் ஒருநாளில் எவ்வளவோவிஷயங்களை அறிகிறோம் பலலாயிரமைமல்களுக்கப்பால நடந்தவிஷயங்களையும் எமக்கு அருகில் நடந்ததைப்போல் அறிந்துகொள்ளச சந்தர்ப்பம்கிடைக்கிறது. எவ்வளவோ பிறமதத்தவர்கள் மனந்திரும்பி நம்மதத்தில் சேர்ந்துகொண்டுவருவதுபற்றிய செய்திகள்கொஞ்சமா? ஏன் அவ்வளவுதூரம் போகவேண்டும்? நமது அடுத்தவீட்டுச் சோமசுந்தரர் குடும்பத்தைப் பார்த்தாயா? அவர்கள் எந்தமதத்தைச் சேர்ந்தவர்கள். இப்பொழுது எந்தமதத்தில இருக்கிறார்கள். அவர்கள் இந்தநிலைமைக்குவர மூலகாரணம் எதுஎன்பதை யோசித்துப்பார். நம்காவலன் அல்லவா?

**ஜோண் :—** அண்ணா! நீங்கள் சொல்வது முற்றும்உண்மை. நம்பாதவர்களையும் நபபச்செய்தது இக்காவலனே. ஓர்பத்திரிகைக்கு இவ்வளவுசக்தி உண்டென்பதற்குக் காவலனே எடுத்துக்காட்டாகும்.

**பீற்றர் :—** தம்பி! பாடசாலையில் நமக்குச்செய்யப்பட்ட போதனைகளையும், நாம்படித்த பாடங்களையுமமறந்துவிட்டீர்போலும் துற்சகவாசத்தால ஒருவன துஷ்டனாவதும, நற்சகவாசத்தால் ஒருவன் நல்லவனாவதும்போல, நல்லபுத்தகங்களை, பத்திரிகைகளை வாசிப்போர் நல்லவர்களாகவும், கெட்ட புத்தகங்கள், பத்திரிகைகளை வாசிப்போர் கெட்டவர்களாகவும் ஆகிவிடுவது சகசமன்றோ! இதுபோல ஒருவரது குணத்தை அறியவேண்டுமாயின் அவருடைய தோழர்களையும், அவர்கையாளும் புத்தகங்களையும்கொண்டுதெரிந்துகொள்ளலாம்என்பது பெரியோர்களின் வாக்கு. ஆதலால், நல்லபுத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாசிப்பது நன்மைபயக்கும்.

**ஜோண் :—** அதுசரிதான். ஆனால், இவ்வளவு சிறுபத்திரிகை அவ்வளவு ஞானத்தைப் புகட்டக்கூடியதா?

**பீற்றர் :—** நீ இவ்வாறுநினைப்பது தவறு. இச்சிறு பத்திரிகையில் பிரதிவாரமும் காணப்படும் ஆசிரியர்குறிப்புகளையும், பல இனியகட்டுரைகளையும், பலசரித்திரங்களையும் பண்டிதர்முதல் பாமரர்வரை — பணக்காரர் முதல் ஏழைகள்வரை வாசித்துமகிழ்ந்து மெச்சிப்புகழ்கிறார்களே. இதுமாத்திரமா? வேதவிஷய விளக்கமென்ன! பக்திக்குரிய புத்திமதிகளென்ன! அர்ச்சியசிட்டர்களின் சரித்திர விஷயங்களென்ன! ஆங்காங்கு பற்பல தேசங்களிலும், நமதுநாட்டிலும் நடைபெறும் விசேஷங்களையும், பலஅரசியல் விவகாரங்களையும் எடுத்தோதும் ஓர் கத்தோலிக்க பத்திரிகையை ஒருகிழமைக்கு ஒருதடவை பத்துச்சதங்கொடுத்து வாங்குவது பெருங்கஷ்டமா சொல்? கரும்புதின்னக் கைக்கூலியும் வேண்டுமா?

**ஜோண் :—** அண்ணா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையே. இப்பொழுதுதான் நான் அதைப்பற்றியஉருசியை உணருகிறேன். நீங்கள் சொல்லிக்காட்டிய அத்தனை நல்லகருத்துகளும் அப்பத்திரிகையில் உண்டானால் பத்துச்சதமல்ல, பத்துரூபா தானும் கொடுத்துவாங்கலாமே. நல்லது நானும்காவலனுக்கு ஒருசந்தாதாரனாகச் சேருகிறேன். என் சொந்தச்செலவுகளைச்சுருக்கி, ஒருகிழமைக்குப் பத்துச்சதம் தருகிறேன். நீங்கள் தயவுசெய்து அப்பத்திரிகையை எனக்குத்தருவித்துக் கொடுப்பீர்களா? இதுமாத்திரம்போதாது அண்ணா. இப்பேர்ப்பட்ட நல்லபத்திரிகையை நமது சிநேகிதர்களுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் சிபாரிசுசெய்து, அவர்களும் அதைவாங்கி வாசிக்கும்படி தூண்டவேண்டும். அப்படிச்செய்வதால் அவர்களும் நல்லபிரயோசனம் அடைவதோடுநில்லாது, பத்திரிகையையும் ஆதரித்ததாகும். பத்திராதிபருக்கும் ஊக்கமளித்ததாகும். என்னசொல்லுகிறீர்கள்?

**பீற்றர் :—** ஆம்தம்பி, அவ்வாறே செய்வோம். மெத்தநல்லது. நாமும் எம்மாலியன்றமட்டும் பலசந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோம்.

ரி. ஏ. அகஸ்ரீன்,
சப்மாள்கந்தை.

---

**திரு. வ. சந்தியாகோபிள்ளை**
(FOREMAN)
அவர்கள்
**அமரபதமடைந்த**
**2-ம் வருட**
**மரண ஞாபகம்**



## 10-12-1957

அப்பா உன்பிரிவாலே துயரானோம் நாங்கள்
அடிக்கடி உன்முறைசொல்லித் துடிப்பதை யார்அறிவார்!
எப்போதும் முகமலர்ந்து இருகையால் அணைப்பாய்
இன்னமுதே என்றுகட்டி முத்தமிட்டு வளர்ப்பாய்
முப்போதும் நிழல்வளர்ந்தோம் எண்ணியிங்கு வாடி
முகம்பார்க்க அழுகுரலை நீகேட்டதிலையோ
தப்பாது மோட்சநெறி தந்திடுவார் தேவன்
சந்ததமும் பொன்னுலகிற் சாந்தியுடன் வாழ்வாய்!

இதனைக்கண்ணுறும் அன்பான சகோதரசகோதரிகளே, இவ்வாத்துமத்தை நினைந்து வருகிறசெவ்வாய்க்கிழமை (10–12–57) உங்கள்செபங்களில் வேண்டுமாறு தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பேரப்பிள்ளைகள்**

---

## நன்றி தெரிவித்தல்

21–11–57 வியாழக்கிழமை "பாதுகாவல"னில் வெளிவந்தபடி 30–11–57–இல் எமக்காகவும், எமது குடும்பத்துக்காகவும் நிறைவேறிய நன்றியறிந்ததோத்திரப் பாடற்பூசைக்குச் சமுகந்தந்து எமக்காக வேண்டிக்கொண்டவர்கட்கும், அன்றுதினம் எமதுஇல்லத்தில் நடந்தேறிய விருந்துஉபசரணைக் கொண்டாட்டத்திலே அடைமழையையும் பொருட்படுத்தாது சமுகந்தந்து பங்குபற்றியவர்கட்கும், சமுகந்தந்து கொள்ளஇயலாது வருத்தம்தெரிவித்து நல்லாசிகூறிச் செய்திஅனுப்பி வைத்தவர்கட்கும் திருக்குடும்பத்தின்பேரால் எமதுமனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சி. எஸ். நாயகம்,
பத்தாவத்தை,
இளவாலை, 5–12–57.

---

● சமீபத்திலே உலகமெங்கும் பெரியகொள்ளைநோயைப்போன்று பரந்த இன்புளுவென்சா என்ற குளிர்சுரம் மிருகங்களிடமிருந்துதான் மனிதருக்குத் தொற்றியிருக்கலாமென்று உலக சுகாதார ஸ்தாபனநிபுணர்கள் கருதுகின்றார்கள். இந்தச்சுரம் பரவுவதற்குப் பன்றிகளும், குதிரைகளும் காரணமாமென்று இப்போது 29 நாடுகளில் ஆராய்ச்சிநடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## பாப்பரசர் படித்த குருமடம்

ரோமாபுரியிலுள்ள கல்லூரிகளுளெல்லாம் மிகப்பழமைவாய்ந்தது காப்ருனிக்கா குருமடமாகும். இதுஆரம்பமாகி 500ஆண்டுகளாகின்றன. இதிலதான் 60 ஆண்டுகட்குமுன் பரிசுத்த பாப்பரசர் தமது குருத்துவபடிப்பை முடித்தார். அப்போது அவரின் சிரேஷ்டராயிருந்தவர் இன்னும் உயிரோடிருக்கின்றார் சமயாசமயம் பாப்பரசரைப்பற்றிய பல விஷயங்களைத் தமதுசொந்த அனுபவவாயிலாக உலகிற்கு ஒலிபரப்பிமூலம் இவர்எடுத்துக் கூறுகின்றார். மகாவந். அல்ரோன்சோகறீன்சிஎன்னும் இவ்வாண்டகை சில தினங்களுக்குமுன் தமது 95-வதுபிறந்த பெருநாளைக் கொண்டாடினார். திருச்சடங்குகளின் தலைமைச்சங்கத்தின் செயலாளராக இன்றும் இவர் சேவைசெய்து வருகின்றார்.

## வத்திக்கான் அவதானநிலையம்

வத்திக்கானின் வானசாஸ்திரசம்பந்தமான சோதிமண்டல அவதானநிலையம் காஸ்தெல்காந்தல்போவிலுள்ள பாப்பாசரின் கோடைகாலவாசஸ்தலத்திலே இருந்துவருகிறது. இதிலேவிரைவில் 'சிமிட்ற்'மாதிரியான புதியதூரதிருஷ்டி யந்திரம்ஒன்று அமைக்கப்பட விருக்கிறது. அநேகவருடகாலம் நடைபெற்ற ஆராய்ச்சிக்கும், ஆயத்தத்துக்கும்பின் அதிகம்நவீனமாதிரியானதும், நட்சத்திர ஆராய்ச்சிக்குரியதுமான இந்தப்பெரியயந்திரத்தை ஆங்கிலேயகம்பெனி ஒன்று செய்துமுடித்திருக்கிறது. துணைஉபகரணத்துடன் இந்தயந்திரம் சமீபத்திலே றெயில்வழியாக வத்திக்கான் நிலையம் கொண்டுபோய்ச் சேர்க்கப்படலாயிற்று. பிந்த இது அங்கிருந்து காஸ்தெல்காந்தல்போவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கே பாப்பரசரின்வாசஸ்தல தோட்டங்களில் அமைக்கப்படும், இதனை அமைப்பதற்கென்று வத்திக்கான்இராச்சிய தொழில்நுட்பகாரியாலயம் கப்பலா ஒன்றை மேலதிகமாக ஓராண்டின்முன்னரே அமைத்துள்ளது.

## புதிய சீவாமிர்தம்

என்றென்றும் இளமையுடனிருக்க வேண்டுமென்று மனிதன்கண்டகனவு விரைவில்நனவாகும்போலத் தோன்றுகிறது. புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஒருசீவாமிர்தம் இத்துறையில் குறிப்பிடத்தக்க வெற்றியளித்திருப்பதாக ஒரு பிரான்சிய ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது. பிரான்சிய விஞ்ஞான கழகத்தின் தலைவரான டக்றர் லியோன் பினெற்றும், பரீஸ்நகரிலுள்ள நெக்கர் ஆஸ்பத்திரியின் ஆராய்ச்சிப் பகுதித் தலைவரான டக்றர் கொலட் ஜெரமைக் சேர்ணியாவும் கால்நடைகளின் கருவிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒருபுதிய அவுடதம் வயோதிபநோயாளிகளின் உடம்பில் ஊசிமூலம் பாய்ச்சப்பட்டதும் அவர்கள் அதிசயிக்கத்தக்கவிதமாக இளமைபெறுகின்றனரெனக்கூறியுள்ளனர். புதியசீவாமிர்தம் ஊசிமூலம் உடம்பில் ஏற்றப்பட்டதும், அவர்கள்இழந்த வலிமையைத் தசைநார்கள் மீண்டும் பெறுகின்றன. மனநிலை பெரிதும் அபிவிருத்தியடைகின்றது. மனோசக்திகள் மீண்டும் உண்டாகின்றன. அங்கங்களில்காணும் சிலகுறிப்பிட்டநோய்களை எதிர்த்துநிற்கும்புதிய வலிமை உடம்புக்கு ஏற்படுகிறது. உடம்பை ஆரோக்கியநிலையில் வைத்திருக்கும் சில குறிப்பிட்டசக்திகள் இரத்தத்தில் அதிகரிக்கின்றன. வழக்கமாக வயோதிபர்களின் உடம்பில் இச்சக்திகள் குறைந்து கொணடேவரும்.

## அவுடதங்களின் பொற்காலம்

கடந்த பத்துவருடங்களிலும் நவமாகக் கண்டுபிடிக்கப்பெற்ற வைத்திய சிகிச்சைகளாலே பன்னிரண்டரைலட்சம்பேருக்கு மேற்பட்ட அமெரிக்கமக்கள் மரணத்தினவாய்ப்படாது இன்று உயிர்வாழ்ந்திருக்கிறார்களென்று திரு. றுபேட கொன்ட்மன் என்ற அமெரிக்கபிரமுகர் கூறுகின்றார். நியூமோனியாஎன்பது இனிமேல் மனிதஉயிரைப் பலியெடுக்கும் ஓர்முக்கியமான நோய் அல்ல; சயரோகமும் விழுந்துகொண்டு போகின்றது; அடுத்தசிலவருடங்களில் "போலியோ"எனப்படும்இளம்பிள்ளைவாதமும் ஒழித்துக்கட்டப்படக்கூடிய நல்லதிர்ஷ்டமும் வந்துகொண்டிருக்கிறது; வாதசுரம், கிட்னிக்கோளாறுகள், இன்புளுவென்சாச்சுரம் ஆதியவற்றால் ஏற்படும் மரணங்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன; நோயாளரைப் பராமரிப்பதிலே மிகப்பெரியதிருத்தங்கள் ஏற்பட்டுள்ளன; ஆயினும், இரத்தாசயநோய், புற்றுநோய்என்பனவற்றால் வருடந்தோறும் ஏறக்குறைய ஒன்பதுலட்சம்அமெரிக்கர் இறக்கின்றனர். இவைகளுக்கும் விரைவிலே அவுடதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிடும்; நாம் அவுடதங்களின் பொற்காலத்தில் உயிர் வாழ்கிறோமென்று அவர் மேலுந்தெரிவித்திருக்கின்றார்.

## கோடைகால மாளிகையில் பாப்பரசர்

காஸ்தெல் காந்தல்போவிலுள்ள தமதுகோடைகால வாசஸ்தலத்திலிருந்து சமீபத்திலே பரிசுத்தபாப்பரசர் வத்திக்கானுக்குத் திரும்புமுன் தமது கடைசியான பேட்டிகளில் ஒன்றை அந்நகரிலுள்ள தம்முடைய அயலவர்களுக்கு அருளலாயினர். முந்தியவருடங்களிலே அங்குள்ள கம்யூனிஸ்தர்கள் அவாதுபிரியாவிடைப்பேட்டியைப் பகிஷ்கரித்திருந்தபோதிலும் இம்முறை அவர்களும் அதில்சமுகமாயிருந்தார்கள். நகரமேயர் மார்செல்லோ கொஸ்தா அவர்கள் பரிசுத்தபிதாவுக்குப் பலிபீடத்துக்கான பூசைப்புத்தகமொன்றை அன்பளிப்புச்செய்தார். தமதுகோடைகால வாசஸ்தலத்தில் பாப்பரசர் தங்கியிருந்த ஐந்துமாதகாலத்திலும் பொதுப்பேட்டிகளிலே வாரந்தோறும் சராசரியாக 20,000 பேரை வரவேற்றுப் பேட்டியளித்திருக்கிறார். 30,000 யாத்திரிகர்களுக்கு விசேஷபேட்டிகள் அருளியிருக்கின்றார். எல்லாமாக 4,50,000 மக்கள் அவரைச் சந்தித்திருக்கிறார்கள். பொதுப்பேட்டிகள்பல அத்தனைபெரியனவாயிருந்து, அவாது வாசஸ்தலத்தின் மத்திய முற்றத்தில் மக்கள்தொகை அடங்காதிருந்த காரணமாகப் பலகாலும் நகரமண்டபத்தில் அவைகள் அருளப்படலாயின. ஏறக்குறைய 82வயதுடையவரான பாப்பரசர் அங்கிருந்து வத்திக்கானுக்குத் திரும்பும்போது அதிகம் நல்ல சுகமுடையவராகத் தோன்றினர்.

## குருவி கொண்டுவந்த செய்தி

இத்தாலியிலே பெட்ரேஸீனோஎன்ற ஊருக்குஅருகில் வேடுவன்ஒருவன் 27-10-57 ஞாயிற்றுக்கிழமை ஒரு குருவியைச்சுட்டு விழுத்தியபோது அதன்காலில் சிறுகண்ணாடிப்பெட்டி ஒன்று கட்டப்பட்டிருந்ததைக்கண்டு வியப்புற்று அதை அவிழ்த்துப்பார்த்தான். அப்போது அதற்குள்இருந்த ஒருசிறுகடிதத்தில் வரையப்பட்டிருந்த செய்திவருமாறு:

"இத்தாலிய போர்வீரர்களான எங்கள் 300பேரை ருஷியர்கள் கடந்த 13 ஆண்டுகளாக யுத்தகைதிகளாகப் பிடித்து வைத்திருக்கின்றனர். வடதுருவத்தில்உள்ள சுரங்கங்களில் எங்களிடமிருந்து அடிமைவேலை வாங்குகின்றனர். நாங்கள் இத்தாலியில பதுவா, வெரோனு, ரோவிகோ, பியூலிம்என்ற இடங்களைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு உதவியாக யாதாவதுசெய்யுங்கள்" என்பதே சென்றயுத்தத்துக்குப்பின் ருஷியாவிலே சிக்கிக்கொண்ட இத்தாலியபோர்வீரர்களின் தொகை 63,000 பேர். ஆனல், ருஷியாவோ அங்குஒருவரும் இல்லையென்று பிரசாரம்செய்துவருகின்றது. குருவிமூலம் தூதுஅனுப்பிய கைதிகளுக்கு ஆறுதலளிப்பதற்காகப் புதிதாய்நிறுவப்பட்டுள்ள வத்திக்கான் வானொலி இருவாரங்கட்குமுன் 26மொழிகளில் அனுதாபச்செய்தி பரப்பிற்று. அதாவது: "மனஞ்சோர வேண்டாம். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார். எல்லாமக்களும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்கள். உங்களுடைய விடுதலைக்காகப் பாடுபடுகின்றார்கள்."

* * *

● 1954-ம் ஆண்டு பங்குனிமாதம் நடைபெற்ற சர்வதேசபோட்டிஒன்றிலே லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரைச்சேர்ந்த போல் லோடர்பாய்க் என்பவர் ஓர் சுங்கானை நீண்டநேரம் அணையாமல் புகைத்துவெற்றியீட்டலாயினர். இவர் 3·3 கிறும் புகையிலையுடனும், இருகுச்சிப்பெட்டிகளுடனும் 1மணித்தியாலம் 55 நிமிஷம் 11செக்கன்வரை தனது சுங்கானை விடாது புகைக்கலாயினர்.

● ஹங்கேரிய சுதந்திரஎழுச்சிக் கலகத்தைத்தொடர்ந்து 35,000 ஹங்கேரியமக்களுக்குமேல் நாடுகடத்தப்பட்டிருக்கிறார்களென்றும், 2,000மக்கள்வரையில் மரணதண்டனை விதிக்கப்பட்டார்களென்றும் சுதந்திரஹங்கேரிய தேசியசங்கமானது சமீபத்தில ஐக்கியநாடுகளின் பிரதமகாரியதரிசியான ஹம்மர்ஸ்க்ஜோல் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கைஒன்றிலே தெரிவித்திருக்கிறது.

● சோஷலிஸமும், முதலாளித்துவமும் சமாதானமுறையிலே ஒன்றுடனென்று போட்டியிட்டால் முந்தியது பிந்தியதைச் சகலதுறைகளிலும்தோற்கடித்துவிடும்; மூன்றாவது உலகயுத்தம்மூண்டால் முதலாளித்துவம் மீள முடியாத கல்லறைக்குள் புகுந்துவிடும்; என்றாலும் அந்தயுத்ததினால் ஏற்படும் நஷ்டம் மிகப்பயங்கரமானதாய் இருக்குமென்று போலாந்தின் கம்யூனிஸ்த ஆட்சித்தலைவரான விளாடிஸ் கோமுல்கா கூறுகின்றார்.

● ஹங்கேரியில் நடந்தேறிய சுதந்திரஎழுச்சிக் கலகத்தை அடக்கமுனைந்த சோவியற் ருஷியபடைகள் புடாபெஸ்ற்தலைநகரின் வீதிகளுக்கும், கட்டடங்களுக்கும் உண்டுபண்ணிய சேதமதிப்பு 3 கோடியே 50லட்சம் பவுண். 220 கட்டடங்களும், அநேகமைல் தூரமான வீதிகளும் திருத்திப் புதுப்பிக்கப்படவேண்டியிருக்கின்றன. உலக சமாதானத்துக்காகப் பாடுபடுவதாய்க் கூறிக்கொள்ளும் சோவியற்ருஷியாவின் சமாதானவேலை இதுதானு?

---

# யேசுவின் திருஇருதயத் தூதன்

- செப அப்போஸ்தலசபை வெளியீடு!
- கத்தோலிக்க குடும்ப மாதாந்திர பத்திரிகை!
- ஆழ்ந்த பொருள் அடங்கிய கட்டுரைகளுள்ளது!
- எழுபதுஆண்டுகளாய்த் திருஇருதயப்பக்தியைப் பரப்பியது!
- கிறீஸ்துவ இல்லங்களில் விசுவாசத்தை வளர்ப்பது!
- சாதாரண மக்களுக்கு ஞானவாசகமாய் விளங்குவது!
- வெளிநாட்டுத் தமிழருக்குத் தாய்மொழியில் ஞானத்தை ஊட்டுவது!

| சந்தா: | | | |
|---|---|---|---|
| உள்நாட்டுக்கு | ... | ... | ரூபா 2-00 |
| இலங்கைக்கு | ... | ... | ரூபா 2-50 |
| பர்மா, மலாயா | ... | ... | ரூபா 2-64 |

இலங்கைச் சந்தாதாருக்கு:
REV. FR. R. CHIRIATTI, S. J.
St. Aloysius' College,
Galle.

A. K.
(அருள் குழந்தைசாமி, யேசுசபை)
திருஇருதயத்தூதன் காரியாலயம்,
செயின்ட் மேரீஸ், தபால்பெட்டி 56,
மதுரை.

---

## பேருபகார நன்றி அறிவித்தல்



அண்டினோர்க்கு அடைக்கலமும், நம்பிக்கையுமான சதாசகாயமாதாவின்அநுக்கிரகத்தினல் நான் கேட்டுக்கொண்ட விண்ணப்பப்படி எனது கணவருக்குக் கிடைத்தவேலை எதிர்பாராதகாலத்தினுள் நிரந்தரமாக்கப்பட்டது. தேவதாயே! எமதுஅனைவோரின் தாழ்மையான மன்றாட்டையும், நன்றியறிதலையும் உமது பாதம் அர்ப்பணம்செய்கின்றோம். மேன்மேலும் உமதுபாதுகாவலைஇரந்து, நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

கன்னிகையும் தாயுமான மரியாயின் நாமம் ஸ்துதிக்கப்படுவதாக.

திரிகோணமலை — R. இம்மனுவல்

---



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் அடியேன் கேட்ட மன்றாட்டு அனுகூலமானதற்காக நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இன்னும் அத்திருத்தாயார் எனக்கும், என்குடும்பத்திற்கும் நன்மையானவைகளில் உதவிசெய்யும்படி அதிவிநயமாய் இரந்துகொள்கிறேன்.

பேசாலை — மரியாயின்பிள்ளை

* * *

எவர்க்கும் உதவிபுரியும் சதாசகாய மாதாவின் இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினாலும் நான் இரந்துகேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். இரக்கமுள்ளதாயாருக்கும், அற்புதவரத்தருக்கும் என்நன்றியைத்தெரிவித்து, இதனைப்பிரசுரிக்கிறேன். அவர்களின்நாமம் எல்லோராலும் புகழப்படுவதாக.

ஞா. செ.

* * *

எனக்குண்டானநோய் பலவைத்தியர்களிடம் சிகிச்சைபெற்றும் குணமுறாது வருத்தப்படும்பொழுது ஆயித்தியமலையில் கோவில்கொண் டெழுந்தருளியிருக்கும் சதாசகாயமாதாவை வேண்டிக்கொண்டேன். அவவுடைய திருசேத்திரத்தில் வழங்கப்பட்ட அன்னதானத்தில் ஒருசொற்பம்அருந்தியதும் எனதுநோய் என்னைவிட்டு நீங்கியது. ஆகவே, நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். சதாசகாயமாதாவின்நாமம் புகழப்படுவதாக.

மட்டக்களப்பு — Mrs. R. A.

---

● உலகிலேயே அதிகபலம்பொருந்திய வானொலித் தூரதிருஷ்டி யந்திரம் ஒன்றைச் சோவியற்ருஷியா அமைத்திருப்பதாக மஸ்கோ நகரிலிருந்து சென்ற 30-ந்திகதி சனிக்கிழமை செய்தி கிடைத்திருக்கிறது. இந்தப்புதிய யந்திரம் சுமார் 426 அடி நீளமுள்ளதென்றும், அதிலுள்ள பிரதிபலிக்கும் கண்ணாடிமாத்திரம் சுமார் 4,300சதுர அடிகொண்டதென்றும் ருஷிய பௌதிகசாஸ்திரியும், கணிதசாஸ்திரநிபுணருமான டக்றர் சிமியோன் கெய்க்கின் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



### அருமைச் சகோதரங்களே !

சென்ற ஞாயிற்றுக்கிழமை குருவானவர் பூசையில் அணிந்த உடுப்பு என்ன நிறம்? ஊதா. கடந்த இருபத்துநான்கு வாரங்களாகப் பச்சைஆயத்தம் அணிந்தார். இன்னும் மூன்றுஞாயிற்றுக்கிழமை ஊதாஅணிந்து பூசை ஒப்புக்கொடுப்பார்.

இந்தக்காலத்தை ஆகமனகாலம்— அதாவது கிறீஸ்துவின் வருகையை உலகமும், சிறப்பாய் யூதசனமும் எதிர்நோக்கியிருந்த காலத்தை நினைவூட்டும் காலமெனத் திருச்சபை அனுசரிக்கிறது. பாலன் பிறப்புக்கு ஆயத்தப்படுத்துங் காலம் அது.

கிறிஸ்து தம்மையே எமக்கு அளித்ததை நினைவுறுத்தும்விழா நத்தால் விழா. நாம் எம்மை அவருக்கு அளிக்கவேண்டும். அவர் தேவன். எம்மை அவருக்குக் கையளிக்கும்பொழுது அவருக்குப் பொருந்தாத எதுவும் எம்மிடம் இருக்கக்கூடாது. ஆகவே, எம்முடைய சுயநலம், மனிதப்போக்கு முதலியவைகளை நாம்கைவிட்டு, யேசுவைப் போலிருக்க முயலுவோம்.

அத்துடன் யேசுவையும், சகலமக்களையும் தன்னகத்தே வைத்திருக்க ஆசிக்கும் யேசுவின் அன்பையும் பிறர்அறியச்செய்ய வேண்டும். அதற்குப் பரித்தியாகம் அவசியம்.

கொடுக்கும் அளவுக்கு நிரப்பப்படுவோம் என்பதை நினைவிருத்தி, பரித்தியாகச் செயல்களால் யேசுவின் பிறப்புத்திருநாளுக்கு ஆயத்தஞ் செய்வோம்.

அண்ணை.

## பெரியார் சிறுவயதில்

ஸ்கொட்லாந்தில்பிறந்தவர் அந்தச் சிந்தனைச்சிற்பி. அவரது வாழ்க்கைத்தொடர்கதையில் இன்பத்தைவிடத் துன்பமே அதிகமாயிருந்தது. இருப்பினும் மனம்தளராமல் எழுதினார். இலக்கியத் தெய்வத்திற்குத் தம்எழுத்துக்களை மாலையாகச்சூட்டி மகிழ்ந்தார். அவரதுவாழ்க்கைவரலாற்றிலே மறக்கமுடியாத ஒரு பொன்ஏடு இதோ :

அந்தப்பையனை வீட்டைப்பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுக் கடைத்தெருவிற்குச் சென்றுவிட்டனர் அவன்பெற்றோர். அப்போது அவர்கள் வீட்டிற்குவந்தான் ஒரு பிச்சைக்காரன். அவன் மிகவும் மெலிந்திருந்தான். போட்டுக்கொள்ள நல்லஉடையில்லை அவனுக்கு. எல்லாம் ஒரேகந்தல். குளிரால் 'வெட வெட' என்று நடுங்கியது அவன்உடம்பு. காலையிலிருந்துஆகாரத்தையே காணவில்லை அவன். அந்தத்தெருவெல்லாம் அலைந்தும் அவனுக்குப் பிச்சை கிடைக்கவில்லை. கடைசியாக இவர்கள் வீட்டிற்குவந்தான் அந்தப்பிச்சைக்காரன்.

அவனது நிலையைக்கண்ட சிறுவனுக்கு நெஞ்சம்கலங்கியது; உடனே உள்ளே ஓடினான். தகப்பனார் அரை, கால்என்றுகொடுத்த நாணயங்களையெல்லாம் தன்பெட்டியில் சேர்த்து வைத்திருந்தான். அவற்றைஎடுத்து வந்து பிச்சைக்காரனிடம் கொடுத்தான். அவன் கண்களிலே ஆனந்தக் கண்ணீர். தன்வயிற்றைக் கழுவிக்கொள்ள வழிகிடைத்ததை அறிந்த பிச்சைக்காரன் அந்தச்சிறுவனை வாழ்த்தியபடியே அவ்விடத்தைவிட்டகன்றான்.

யாருக்குமே ஏற்படமுடியாதஅளவு இரக்கஉணர்ச்சி அந்தச்சிறுவனுக்கு உண்டாயிற்று. அதற்குக் காரணம் என்னதெரியுமா? அவனும் ஓர்ஏழைக்குடும்பத்தைச்சேர்ந்தவன்என்பதுதான். வறுமையிலே வளர்ந்தவனுக்குத்தான் வறுமையின்கொடுமை தெரியும். அதனால்தான் அவன் ஆசையோடுசேர்த்து வைத்திருந்த நாணயங்களைப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தான்.

அந்தச்சான்றோன் யாரென்று நினைக்கின்றீர்கள்? "பிராஞ்சுப்புரட்சி" என்ற புத்தகத்தின்மூலம் புகழேணியின் உச்சியைஅடைந்த பெரியார் —**தோமஸ் கார்லைல்**தான் அந்தச்சிறுவன்.

## கதையைக் கேளுங்கள்!

சென்னையில் ஓர் பூந்தோட்டம். பெரியவர்ஒருவர் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். கிழிந்த கந்தலையுடுத்தி, ஒருஏழை தள்ளாடித் தத்தளித்து அவரருகே வந்துநின்றான். "ஐயா, குடும்பம்முழுவதும் பட்டினி! சாப்பிட்டு நான்குநாட்கள்!" என்று தனது வறுமைநிலையை வர்ணித்தான். "நீங்கள் வீட்டில் எத்தனை பேர்?" பெரியவரின் கேள்வி இது. "ஐயா, நாங்கள் நாலுபேர்."

"நாலுபேரா ?......சரி, என்னிடம் ஐந்துரூபாதான் இருக்கிறது. இந்தா நாலு ரூபா, இதைக் கொண்டு பசியாறுங்கள்" என்றுகூறிப் பெரியவர் பையிலிருந்து நான்குரூபாவை எடுத்து நீட்டினார்.

பிச்சைக்காரன் அவரை வாழ்த்தி விட்டும[illegible]தான். மறைந்தவன் பூங்காவைவி[illegible]நீங்கவில்லை. ஒரு மரத்தின்பின்னே சென்[illegible] ஒளித்துக்கொண்டான். தென்றலின் இன்பத்திலே, பெரியவர் சற்றுக்கண்ணயர்ந்தார். பிச்சைக்காரன் தன்இடத்திலிருந்து மெதுவாகவந்தான். பெரியவரின் 'பேர்சை' உருவினான். அவர் தமக்கென வைத்துக்கொண்ட ஒரு ரூபாவையும் அபகரித்துக்கொண்டு ஓட்டம்பிடித்தான்.

கடவுள் நமது வயிற்றுப்பிழைப்புக்கு அளித்துள்ளது ஆறுநாட்கள். தமதுவழிபாட்டுக்கென வாரத்தில் ஒரேஒருநாளைத்தான் நியமித்தார். நாம்அந்த ஒருநாளையும் திருடப்போகிறோமா, அந்த நன்றிகெட்ட அயோக்கியனை[illegible]போல்?

— தி. இ. தா.


எதிர்பாருங்கள் !

**கிறிஸ்மஸ் ஆண்டுமலர் 1957**



- மூவர்ண அட்டைப்படம் அழகுசெய்கிறது.
- மலரிலிருந்தெடுத்துச் சட்டத்தில் மாட்டக்கூடியதும், திருஇருதயஸ்தாபகஞ் செய்தற்கேற்றதுமான திருஇருதயநாதர் படத்தை அகத்தே அடக்கியது.
- மேற்றிராணிமார், குருமார், பண்டிதர்கள், அறிஞர்கள் பலர் எழுதிய கருத்துநிறைந்த கட்டுரைகளைக் கொண்டது.
- வித்துவான்கள், புலவர்கள் வரைந்த கவிதைஓவியங்கள் ஒளிர்வது.
- இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள தலைசிறந்த கதாசிரியர்பலர் எழுதிய சிந்தைக்கு விருந்தளிக்கும் அநேக கதைகளை அடக்கியுள்ளது.
- அழகுநிறைந்த சித்திரப்படங்கள் நிறைந்துள்ளது.
- நத்தால்விழாவில் நடித்தற்கேற்ற நாடகமும் ஒன்றுள்ளது.

விநியோகிஸ்தர்கள் தேவை.

தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ கழிவு உண்டு.

சுவாமி M. J. மரியாம்பிள்ளை,
சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.


### நகைச்சுவை

அப்பா—நான் உன்னைப்போல் சிறுவயதில் ஒருபொய்கூடச் சொல்லியது இல்லை.

பையன் — அப்போ, எப்பத்தான் பொய்சொல்லப் பழகினீர்கள்?

* * *

ஆசிரியர் — சோமு! இவ்வகுப்பிலுள்ள இருபத்தைந்து மாணவருக்கும் 50 சதவீதம் கொடுத்தால் என்னவரும்?

சோமு—சந்தோஷம்வரும் சார்.

### சிறுவரே !

எதிரேவரும் நத்தால்திருநாள் அநேக குடும்பங்களில் இருள் நிறைந்த நாளாயிருக்கும். நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமிகள் உடுத்த நல்ல சீலைசட்டை இல்லாதிருக்கிறார்கள். இப்பெருநாளில் ருசியான பலகாரம் சாப்பிட வழியின்றித் தவிப்பார்கள். நூதனமான விளையாட்டுப் பொருட்களோ அவர்கள்கை அறியாது.

விசேஷமாய் ஆஸ்பத்திரியில் வருத்தமாயிருக்கும் பிள்ளைகளுக்கு நத்தால் எப்படியிருக்குமோ?

நீங்கள் அனுபவிக்கிற நன்மைகளில் உங்கள் சிறிய வறிய சிநேகிதருக்குங் கொடுங்கள்.

**என்ன கொடுக்கலாம்?**

முதல் உங்களிடம் என்ன உண்டு எனப் பாருங்கள். பழைய பொம்மைகள், கார்கள், ஊதிகள் முதலியன இருக்கும். ஏதோ ஒரு கொடை அளியுங்கள்.

உங்கள் கொடைகளைச் **சங். தாயார், திருச்சிலுவைக் கன்னியர் மடம், கடற்கரைத் தெரு, யாழ்ப்பாணம்.** என விலாசமிட்டு அனுப்பினால் அவை ஏழைச் சிறுவர் சிறுமிகளின் கைகளிற் சேரும் என்பது நிச்சயம்.

அவர்களுடைய மகிழ்ச்சி உங்களுடைய ஆனந்தம்!

சிறுமிகளே !!

## நாம் இருவர்

— காவலூர் யோபு —

எனது அண்ணா எனக்கு ஐந்துவயதுக்கு மூத்தவர். ஆனாலும், மூன்று வகுப்புகள்தான் நான் பிந்திநிற்கிறேன். நான் பாடசாலைக்குச் சேர்க்கப்பட்ட அதேவயதில்தான் அண்ணாவும் பாடசாலையில்சேர்க்கப்பட்டிருப்பார். ஆனால், கல்வியின் உறுதியான அத்திவாரம் வேண்டுமென்றோ என்னவோ, ஒரேவகுப்பில் இரண்டு அல்லது மூன்றுவருடங்கள் தங்கி விடுவார்.

எனக்கு ஒன்பதுவயது. அண்ணாவுக்குப் பதினான்குவயது. எனக்குமுன் இந்தப்பூமியில் பிறந்துவிட்டதால் என்னை அடக்கவும், ஆளவும், என்குறைநிறைகளைப் பாராட்டவும் அதுஅவருக்குவழிவகுத்து விட்டது. அண்ணாவின் கட்டளைகளைச்சிரமேற்கொள்ளவேண்டியவன் நான். அண்ணாவோ புத்தகப்பிரியர். எப்பொழுதும் ஏதாகிலும் ஒருபுத்தகத்துடனேயே அவரைக் காணலாம். புத்தகக் கரைகளில் படங்கள் வரையும் பொழுது அவசியமின்றி ஒற்றைகளில் ஏதாவது எழுதிக்கொண்டோ அன்றேல் ஒருசொல்லைப் பலமுறை புரட்டிப் புரட்டி எழுதிக்கொண்டோ இருக்கும்பொழுது, இப்படி அண்ணா ஏன்செய்கிறீர்என்றுகேட்டுவிடவேண்டுமென்று எனக்குத் தோற்றினாலும், கேட்பதற்குத்துணிவேது? எப்படியோ அவர் எட்டாம் வகுப்புப் படிப்பவர். ஐந்தாம் வகுப்புப்படிக்கும்நான், அண்ணா புத்தகங்களில் எழுதும்சொற்களின் கருத்தைத்தானும் ஆழமறிந்துவிட என்னால் முடியுமா? அது எனக்குப் பொருந்தாத — தகுதியற்ற செயல் அல்லவா?

அண்ணாவைப்போல் ஒரேயடியாகப் படித்துக்கொண் டிருப்பதென்றால் எனக்கு முடியாதகாரியம். ஒரு மணித்தியாலத்திற்குத் தொடர்ந்து வாசிப்பதே கடினம். தருணம் கிடைத்த நேரமெல்லாம் விளையாட்டிலேயே கழித்தேன். ஆனால், விளையாட்டில் நான்அனுபவிக்கும்சந்தோஷத்தை அண்ணா கெடுத்து விடுவார். விளையாடிவிட்டு விடுதிவீட்டுக்குவந்து அறையில் நுழைந்ததும், "இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் எங்கேபோய் இருந்தாய் ?" என்றுதான் கேட்பார். விளையாடி விட்டுவருகிறேன் என்று சொல்ல எனக்குத் தைரியம்வராது. எனது மௌனம் அதற்குச் சாட்சியாகி விடும். அப்பொழுது அண்ணாவின் முழக்கத்திற்குக்குறைவில்லை. "இது தானா நீ ஆங்கிலம்படிக்கிற இலட்சணம்? இப்படி வீணேவிளையாடி நாளெல்லாம் கழித்துவிட்டால் உனது சீவியத்திலேயே ஆங்கிலம் கற்கமாட்டாய். முயற்சிதான் பலன்தரும். நான் உன்னைப்போன்று எனது நேரத்தை விளையாடிக்கழித்தது நீ அறிவாயா? எனக்குக்கிடைத்த நேரம் முழுவதையும் கல்வியிலேயே செலவிட்டு, ஒருவகுப்பிலே இரண்டு மூன்றுவருடங்கள் தங்கிவிடவேண்டியிருக்கிறது. நீயோ வென்றால் இலை கிடைத்த நேரமெல்லாம் விளையாடி விட்டுச் சித்தியடையலாம் என்று எண்ணுவது முயற்கொம்பு. ஆகவே, உன்பழக்கத்தைத் திருத்து. அது முடியாவிட்டால் வீட்டுக்குப்போய் விடு. பாடசாலை விடுதியிலிருந்து அப்பாவின் பணமெல்லாம் வீணுக்காதே" என்றுபொரிந்துதள்ளுவார். அண்ணா என்னைக் கண்டிக்கும் பொழுது சிலசமயங்களில் நான்அழுதுவிடுவேன். சிலவேளைகளில் அப்பாவின் பணத்தை நான்வீணுக்குகிறேனென்று அண்ணாசொல்லுவது சரியென்றுபடும். அண்ணா என்னைத் திருத்துவதற்காகவே இப்படிப்பேசுகிறார் என்று எண்ணுவேன்.

புதியவேலைத் திட்டத்தை (Time Table) எழுதிஅதன்படி பாடங்களின் முக்கியத்துவத்துக்கேற்ப நேரத்தைப்பங்கிட்டு நேரசூசியைக்கடைப்பிடிப்பது என்றுஎண்ணிக் கருமம் ஆற்றியபொழுதும் எழுதியதிட்டத்தை அனுட்டிப்பது வல்லமையாகத் தோற்றியது. இரண்டு மூன்றுநாட்கள் மிகவும் கஷ்டப்பட்டு அதன்படி ஒழுகுவேன். பின்னர் பழையபடி விளையாட்டுக்குணம் திரும்பவும் என்னை விளையாடத் தூண்டிவிடும். நேரசூசி பெயர்அளவில்தான் இருக்கும். மீண்டும் அண்ணாவின் சுடுசொற்களுக்கும், கண்டனங்களுக்கும்ஆளாகிவிடுவேன். அண்ணாவின் பிடியிலிருந்துதப்பப்பலமுறைகளில்எனது அறைக்குப் போகும்போது அண்ணாவின் கண்ணிற்படாது நுழைந்துவிடுவேன். சப்தம் சந்தடியின்றி நடமாடுவேன். (வளரும்)

## எதனாலே ?

இறைவனை வணங்கவேண்டும்
எதனாலே ?
இன்னல்கள் பறந்துவிடும் அதனாலே.
வாத்தியாரை வணங்கனும் எதனாலே ?
வாழ்விலே அறிவுவரும் அதனாலே.
படிப்பு வேண்டுமென்பது எதனாலே ?
பகுத்தறிவு வளரும் அதனாலே.
பத்திரிகை படிப்பது எதனாலே ?
பலவிஷயம் தெரியும் அதனாலே.
வேலை செய்வதுநாம் எதனாலே ?
கூலிப்பணம் கிடைக்கும் அதனாலே.

V. N. P.

# கோமுல்காவின் ஓர்வருட ஆட்சி

போலாந்திலே இற்றைக்கு ஓர்ஆண்டின்முன் நடைபெற்ற "ஐப்பசி ஆசியற்புரட்சிக்கலக" த்தின்போது போலிஷ் ஐக்கிய தொழிலாளர்கட்சியின் முதலாவது காரியதரிசியான டபிள்யு. கோமுல்கா அதிகாரத்துக்கு வந்தார். போலாந்திலே நிலைமைகள் தற்போது அதிகம் நன்றாயிருப்பதாகப் போலிஷ் மக்களில் மிகப்பெரும்பான்மையினர் ஒப்புக்கொள்ளுகின்றனர். திருச்சபையின் நிலைமையும் திருத்தமடைந்துள்ளது. ஆயினும் கோமுல்காவுக்கு இருந்துவந்த நன்மதிப்பு இப்போது குன்றிக்கொண்டுவருகிறது. மக்கள் அதிகமதிகம் கருமம் விளங்கியவர்களாய், போலிஷ் ஸ்ராணிஸ்தர்கள் தோல்வியடைந்து, சோவியற்தளபதியானமாஷல் றெகொஸொவ்ஸ்கி ருஷியாவுக்குச்சென்றதும் நாட்டிலே அடியோடுமாற்றங்கள் செய்யப்படவேண்டுமென நிற்கின்றார்கள்.

போலாந்தின் பொருளாதாரநிலை இன்னுமே மோசமாக இருக்கின்றது. கூட்டுப்பண்ணைகள் கலைக்கப்பட்டதன் மேல் விவசாயம்தீவிரமாக முந்திய நிலைமைக்கு வந்துகொண்டிருந்தபோதிலும், கிராமவாசிகளுக்கு விசேஷப்பட்ட பொருளாதாரசலுகைகள் செய்யப்பட்டபோதிலும் வாழ்க்கைத்தரம்இன்னுமே அதிகம்குறைந்தபடியில் இருந்துவருகிறது. போலிஷ்காரர்அநேகர் பிரித்தானியதேசத்தைப்போய்த் தரிசித்துவிட்டுத் திரும்பியதிலிருந்து மேற்குஐரோப்பிய நாடுகளிலெல்லாம் பெரியதுன்பமும், பீடையும், வறுமையுமென்று போலிஷ் கம்யூனிஸ்த அதிகாரிகள் பரப்பிவந்த பொய்ஆட்டங்காணும்படிசெய்து, அதெல்லாம் படுபொய்யென்று பார்த்திருக்கும் செய்தி காரணமாகப் போலிஷ்மக்களிடையே பெரும்முறையீடுகள் எழுந்திருக்கின்றன. மஸ்கோ—அதாவது சோவியற் அரசு நெருக்கிச்சொல்லுகிறபடி கோமுல்கா நடந்துகொள்ளுகிறாரென்றும், அதனால்தான் சென்ற கார்காலத்தில் தான்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவைக்க முடியாதிருக்கிறாரென்றும் அதைரியமடைந்தமக்கள் நம்புகிறார்கள்.

---



## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்குத் அனுப்பப்பட்ட காணிக்கைகள்

லுனுவில்லா: ஆர். பெர்னாண்டோ 5-00—இற்றாலை: பிறாங் அன்ரன் 4-00— அடம்பன்: ஜி. கபிரியேல் 1-00 — முள்ளிக்குளம்: மிசெஸ் பிரான்சிஸ் குருஸ் 3-00, மிசெஸ் எஸ். சில்வா 1-00, ஏ. எஸ். லெம்பேட் 1-00, எம் செபமாலை 2-00, எம். எஸ். சில்வா 1-00, எல். ஏ. லேனுள் 2-00 — கொழும்பு: ஜி. அந்திரேஸ் 6-00, மிசெஸ் ஏ. பொன்ராசா 9-00, மிசெஸ் ஏ. பிரான்சீஸ்பிள்ளை 6-00 — ஹெலிஓயா: ஆர். எம். பி. பிள்ளை 2-00—உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 3-00 — நனுஓயா: எவ். எம். பர்ணபாஸ் 2-00—முருங்கன்: எல். லெம்பேட் 1-00 — சுன்னாகம்: கே. ஏ. பொன்னையா 5-00 — வின்டுலா: எம். பி. போல் 3-00 — நிறிற்றேன்: டபிள்யு. டி. குணராசா 5-00 — சூராவத்தை: பி. ஏ. இராசரத்தினம் 5-00, எஸ். சின்னத்தங்கம் 8-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00 — நீர்கொழும்பு: எஸ். ஜி. செல்லத்துரை 5-00, ஓ. எக்ஸ் பெர்னாண்டோ 10-00, எஸ். ஜி. மிராண்டா 2-00, ஓர் உபகாரி 5-00 — கற்பிட்டி: எஸ். பி. நோயிஸ் 14-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00 — முல்லைத்தீவு: எம். அருளானந்தம் 1-50 — கொச்சிக்கடை: பி. எஸ். கயித்தான் 10-00 — யாழ்ப்பாணம்: எம். வி. ஆசீர்வாதம் 1-00, எஸ். சவிரிமுத்து 1-00, மிஸ் பிளசம் 5-00, ஜி. எம் எஸ். லில்லி 12-50 — ஓயா: ரி. ஏ. குருஸ் 4-00 — ஆனையிறவு: ஜே. மரியநாயகம் 4-00 — பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 2-00 — பருத்தித்துறை: ஜி. எம். அருளப்பு 2-00, வி. எஸ். மரியாம்பிள்ளை 1-00 — சுண்டிக்குளி: பி. சவிரிமுத்து 2-50—றங்கொட்டுவா: வி. ஏ. பீரிஸ் 3-00 — கந்தானை: மிசெஸ் ஜே. பி. வின்சென்ற் 1-00 — கோகம்பிட்டியா: ஜே. தம்பிராசா 2-00—[illegible]ளியவளை: எம். இம்மனுவல் 2-50—[illegible]ாவற்குளி: ரி. வில்லியம் 5-00—[illegible] கம்பளை: மிசெஸ் ஏ டி. சேவிய[illegible]-00 — கொற்றன்தீவு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 10-00—மாம்புரி: ஆர். எம். சூசை 5-00, எஸ். மரியான் 5-00, வி. மனுவேல் 2-00 —இந்தியா: பி. காமிநாயக்கர் 10-00— பனுவில்லா: ஏ. சின்னப்பன் 3-00 — கணசுபாவா: பி. ஜி. பி. பிள்ளை 5-00 — வேப்பங்குளம்: எம். பிலோமினம்மா 2-00—மானிப்பாய்: வண. பீற்றர்சுவாமியார் 5-00 — சூராவத்தை: ஜே. கிறிஸ்ரினு 2-00.

| | |
|---|---|
| The Director. St. Joseph's Conference. Bishop's House JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம். |

---

✻ உலகில் மணித்தியாலம் ஒன்றுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன ?

சராசரியாகச் சுமார் 500 குழந்தைகள் பிறக்கின்றனவென்று ஐக்கியநாடுகள்ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வருடாந்தஅறிக்கை கூறுகின்றது. அதனால், உலகின்சனத்தொகை நாள்தோறும் சுமார் 1,20,000 பேர்வீதமும், வருடந்தோறும்4கோடியே 30லட்சம் பேர்வீதமும் அதிகரிக்கின்றது. இப்போது உலகின் மொத்தச்சனத்தொகை 270கோடிபேரெனக் கூறப்படுகின்றது.

---

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**மரியாயின்சேனை உதவிஅங்கத்தவர்கள் மகாநாடு 1957 :—** பரிசுத்த வியாகுலமாதா பங்கிலே மரியாயின்சேனை ஸ்தாபகமானபின்னர் கடந்த 1-12-57 ஞாயிறுவாரம் பிற்பகல் 4 மணியளவில் முதலாவதாகக் கூடிய உதவிஅங்கத்தவர்கள் மகாநாடானது தீவிரமாக விசுவாசப்பரப்புதல் சேவையில் ஈடுபடவேண்டிய தன்கடமைகளை எடுத்துக்காட்டியது. தாண்டவன்வெளிப் பிரசீடியத்தைச்சேர்ந்த காரியஅங்கத்தவர்களும், உதவிஅங்கத்தவர்களும், புளியந் தீவுப் பிரசீடியத்தைச்சேர்ந்த அங்கத்தவர்களும சமுகமாய் இருந்தனர்.

தாண்டவன்வெளிப் பிரசீடியத்தின் ஞானத்தலைவர் வண. ஜோர்ஜ் ஈ எல். வம்பேக்சுவாமியவர்களால் 1-12-57 பிற்பகல் 4 மணியளவில பங்குஆலயத்திலசெபமாலை, பிரார்த்தனைகட்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம அருளப்படலாயிற்று. 4-30 மணியளவில் அங்கத்தவர்களும், ஞானத்தலைவரும் கிளெனி ஆண்பாடசாலையில் கூடினர். மகாவந். மேற்றிராணிஆண்டவர் அவர்களைக் குருவானவரும், அங்கத்தவர்களும் பாடசாலைவாயிலில் ஒன்று கூடி வரவேற்றார்கள். அப்போது ஓர்சிறுமி ஆண்டவரவர்கட்கு ஓர்பூச்செண்டை அன்பளிப்புச்செய்தாள். பின்புகூட்டம் ஆரம்பமானது. ஞானவாசிப்பின் பின் மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கள் தாண்டவன்வெளிப்பங்கில் மரியாயின்சேனை செய்துவரும் ஊக்கமானசேவைகளை வெகுவாகப்பாராட்டிப்பேசினார். மேலும்அவர்தொடர்ந்து பேசுகையில்: உதவி அங்கத்தவர்களின் செபமும், பரித்தியாகமுந்தான் காரியஅங்கத்தவர்கட்கு உதவியளிக்கும் ஊன்றுகோலென்று எடுத்துக்காட்டினார் அர்ச். சவேரியார் மிஷன் நாடுகளில்பகிரங்கமாகச்சேவைசெய்யலானார்; அர்ச். தெரேசம்மாள் கன்னியர்.மடத்திலிருந்துகொண்டே செபம், தபம், ஒறுத்தல் இவற்றால் தேவ உழைப்பில் அர்ச்.சவேரியாரைப்போல சமத்துவ அளவு சேவைசெய்ததால்அல்லவோ அவ்விருவரையும் மிஷன் நாடுகளின் பாதுகாவலர்களாக நாம்கொண்டாடுகிறோம்; இதுபோன்றே காரிய, உதவிஅங்கத்தவர்கள்சேவை அமையவேண்டுமெனக் கூறினார்.

சிற்றுண்டி, களியாட்டுகளுக்குப்பின் தேவதாயாரின் சங்கிலிச்செபம் எல்லோராலும்ஓதி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகள்பேசியபோது, நமதுபங்கை நாம் தேவதாய்க்கு ஒப்புக்கொடுத்துள்ளோம். எனவே, நாம் மாதாவின்சேவைகளைத் திறம்படச் செய்து அவவின்அன்பார்ந்த பிள்ளைகளாகிக்கொள்வோமெனக் கூறினர். தொடர்ந்துபேசுகையில்: நமதுஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் 33 வருடசீவியத்தில் 30வருடமும் அவர் செபத்தாலும், தபத்தாலும், ஒறுத்தலாலும் தமதுசேவையை உலகமக்களுக்குணர்த்தி, பகிரங்கசேவையில் 3 வருடகாலம் செலவுசெய்து நமதுதாயாகிய திருச்சபையை ஸ்தாபித்தார்; எனவே, நாமும் நமதுசெபத்தாலும், தீவிரஉழைப்பாலும் விசுவாசப்பரப்புதலைத் திறம்படச் செய்வோமாகஎனக் கூறினர். முடிபுச்செபம் எல்லோராலும் சொல்லப்பட்டதும் "நாம் நிற்போம் தேவனுக்காக" என்றபாடல் பாடப்பட்டது. சங்கீதக்கச்சேரிநடைபெற்று மகாநாடு இனிதுநிறைவேறியது.

**உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள் மாதத்தின் இறுதி நாள் : 30-11-57** சனிக்கிழமைகாலை 6மணியளவில் பரிசுத்தவியாகுலமாதா ஆலயத்தில் பங்குவிசுவாசிகள் எல்லோரும் ஒன்றாகக்கூடி, இப்பங்கிலிருந்து மரித்தவர்களின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் திவ்விய பூசைகண்டு, திவ்வியநன்மைபெற்று ஒப்புக்கொடுத்தனர். பங்குக்குரவரால் அன்றுபிற்பகல் 6 மணியளவில் செபமாலை, பிரார்த்தனைகட்குப்பின் விசுவாசிகள் பின்தொடர ஆலயவளவு ஆசீர்வதிக்கப்படலாயிற்று. பின்னர் மேலடயா சீர்வதித்துத் துக்க மாலையாராதனை பாடப்பெற்றது.

**பூசைப்பரிசாரகர் வருடாந்த பொதுக்கூட்டம் : 30-11-57** சனிக்கிழமைகாலை 8-30 மணியளவில் பங்கு விசாரணைக்குரவர் தலைமையில் பூசைப்பரிசாரகரின் வருடாந்தத பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்குச் சமுகந்தந்த அங்கத்தவர்களைத் தலைவர் வரவேற்றுப்பேசுகையில், நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சம்மனசுகளாக மிளிரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பின்னர் நடப்புவருட உத்தியோகத்தர்தெரிவு நடைபெற்றது. தலைவர்—எட்வேட் துரைராசா, காரியதரிசி — அந்தோனி யோசேப், தனதிகாரி — ஏ. யோசேப் கனகசிங்கம், உதவிக்காரியதரிசியும், உதவித் தனதிகாரியும்—ஜே யோசேப் ராசா, ஆலோசகர்—பி. யோசேப் அரியம்என்பவர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்படலாயினர். செபத்துடன் வண. குரவரின்ஆசீர்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

— நிருபர்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 5-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org